ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசொலி

வார இதழ்

முரசு 4 | 31—1—58 வெள்ளி | ஒலி 38

"உலகம் பூராவும் 'பாகிஸ்தான் கிடைக்கவா போகிறது' என்று எண்ணியிருந்த நேரத்தில் — ஜனாப் ஜின்னாவுக்குக்கூட சந்தேகமிருந்த நேரத்தில் — காந்தியாருக்குக்கூட கலக்கம் இருந்த நேரத்தில் — ஜவகர்லால் நேருவும் 'இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா' என்று எண்ணிய நேரத்தில் தன்னந் தனியாக, துணிந்து, தளராமல், 'பாகிஸ்தானத்தைப் பிரித்துக் கொடுப்பதன் மூலமாகத்தான், இந்தியத் துணைக்கண்டத்தின் எதிர்காலத்தில் சாந்தியிருக்கும்' என்று சொன்னவர் ஆச்சாரியார்! அவர் வார்த்தையைச் சேவை செய்தவர்கள் அநேகம்பேர்! எதிர்த்துக் கிளம்பியவர்கள் அநேகம் பேர்! அவர் காங்கிரசை விட்டு விலகி விட்டதாகக்கூடச் சொன்னார்கள்; அவரும் விலகி வந்துதான் அந்தக் காரியத்தைச் செய்தார்!

"பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் எனும் யோசனைக்கு ஆதரவாக அன்று அவர் சொன்ன ஒரு உதாரணத்தை இந்த நேரத்தில் நினைவூட்டுகிறேன். 'நாம் அணிந்து கொள்கிற மேலாடையில் எங்கேயாவது நைந்து போய் விட்டால் அதை அப்படியே வைத்திருந்தால், ஆடை பூராவும் பாழாகி விடும்; கொஞ்சம் யூகமுள்ளவர்கள் அந்த ஆடை எந்த இடத்தில் நைந்திருக்கிறதோ அந்த இடமாகப் பார்த்து வெட்டி இரண்டு துண்டுகளாக்கினால் இரண்டு பேருக்கு மேலாடை கிடைக்கும்'—என்று பாகிஸ்தான் பிரிவினை குறித்துச் சொன்னார்.

"இன்று நம் உள்ளங்கள் எல்லாம் நைந்திருக்கின்றன; நேரு சென்னைக்கு வந்திருந்தபோது—நம் தலைவர்களை ஏதோ பேசினார் என்றதைக் கேட்டபோது, நம்முடைய உள்ளங்கள் எல்லாம் வாடின.

"மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் — என்ற தமிழ் நாட்டுப் பழமொழிக்கு ஒப்ப, அவர்கள் நம்மை—நம்முடைய மேதைகளை—நமது அறிவாளிகளை மதிக்க மறுக்கிறார்கள். இந்த காரணத்தாலே நாம் தனித்திருப்போம். ஆகவே இப்போது நாம் நாட்டுப் பிரிவினைக்கு வழி காண்போம்.

—அறிஞர் அண்ணா



விழி திறந்த மொழிப் போரே விடுதலைப் போரின் முதற் கட்டம்!

[23—1—58 அன்று சென்னை, இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தின் சார்பில் நடந்த ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களும், திரு ஆச்சாரியாரும் மொழிப் பிரச்சினை குறித்தும் நாட்டுப் பிரிவினை குறித்தும் கருத்துக்கள் தெரிவித்தனர்.]



"நாட்டுப் பிரிவினைபற்றி திரு. அண்ணாத்துரை அவர்கள் பேசினார்கள்; "அப்படிப் பிரிந்து போக வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால் பிரிவோம்; அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; முதலில் நாம் எடுத்துக் கொண்ட காரியத்தை வெற்றி பெறச் செய்வோம்; இடையில் நாம் நாட்டுப் பிரிவினையையும் சேர்த்துக் கொள்ள வேண்டாம்; அதைக் கொஞ்சம் ஒத்தி வைப்போம்" என்று திரு. அண்ணாத்துரை அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"தமிழ்நாடு பிரிவினைக்கு இந்திப் பிரச்சினை ஒன்றுதானா இருக்கிறது? வேறு காரணமே இல்லையா? இன்னும் எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றனவே! ஆகையினாலே முதலில் இந்திப் பிரச்சினையில் மட்டும் நாம் அனைவரும் தோளோடு தோள் நின்று போராடுவோம். இந்தச் சிறிய காரியத்தில் வெற்றிகிடைத்து விடுமேயானால், பிறகு பெரிய காரியங்களில் நாம் ஈடுபடும்போது அவர்கள் (வடநாட்டவர்) நம்மைக் கண்டு பயப்படுவார்கள்.

"மொழிப் பிரச்சினையை வைத்துத்தான் பிரிவினைக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதில்லை; இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் வெற்றி பெற்று விட்ட பிறகும் பிரிவினைக்குப் போராடலாம்.

"போராட்டம் என்றால் அதில் பலகட்டங்கள் உண்டு. அதில் முதல் கட்டத்தில்தான் நாம் இன்று இருக்கிறோம்.

"வெற்றியில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. தோல்வியடைந்து விடுவோம் என்று ஆரம்பத்திலேயே நினைத்துக் கொண்டு போராட்டத்தில் இறங்கக்கூடாது.

"நாட்டில் ஒரே மொழிதான் இருக்கிறது என்றால்கூட பிரிவினை கோரமுடியும். அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஒரே மொழியைப் பேசும் நாடுகள்தான்; அவர்கள் பிரிந்து போகவில்லையா? பிரிய வேண்டிய நிலை வருமேயானால் நாம் பிரிந்து போகலாம்; அதனால் ஒன்றும் கெடுதல் வந்துவிடாது!"

—ஆச்சாரியார்

புகைப் படங்கள்:
இ. கருணாகரன், செ

கற்பனை உரையாடல்

★ பொங்கிய பொங்கல்! ★

காட்சி : 1

[அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆர்வமுடன் கூடிய ஆயிரமாயிரம் மக்கள், தி. மு. க. தலைவர்கள் கைதான திடுக்கிடும் செய்தி கேட்டு உள்ளம் உடைந்த நிலையிலே வீடு திரும்பும் பொழுது, போலீசார் போக்குவரவுக்கு வழி செய்வதாகக் கூறி, மக்களின் மீது தடியடிப் பிரயோகம் நடத்துகிறார்கள். தடியடி பட்டுக் கீழே விழுந்த தி. மு. க. தோழர்களை கவனிக்காமல் மிதித்துக் கொண்டு மக்கள் மிரண்டு ஓடுகிறார்கள். கூட்டத்தினரின் காலடியிலே சிக்கி தி. மு. க. தோழர்கள் படுகாயமுறுகின்றனர். இதைக் கண்ட 'சென்னியப்பன்' கண்ணீர் விடுகிறான். தானும் மறுநாள் கருப்புக் கொடி நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள வேண்டுமென அப்பொழுதே தீர்மானிக்கிறான். கீழே விழுந்து காயமுற்றவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு, நேரே கடைத் தெருவுக்குச் சென்று, கருப்புக் கொடி ஒன்றைத் தைத்துக்கொண்டும், குழந்தைகளுக்கு சில சாமான்களை வாங்கிக் கொண்டும், தன் அன்பு மனைவிக்கு புடவை எடுத்துக் கொண்டும் வீடு வந்து சேருகிறான்.]

"தமிழரசி...தமிழரசி !......ஓடி வாம்மா!...ஓடி வா !...... என் கண்ணுல்லே...இதோ பார்! உனக்குப் பொங்கலுக்குப் புதுச் சட்டை, விளையாட்டு பொம்மை எல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் !......டேய் செல்வா! நீ எங்கேடா போயிட்டே!..இதோ உனக்கு ரொட்டிப் பொட்டலம்! பொங்கலுக்குப் பட்டாசு கூட வாங்கி வந்திருக்கிறேன்!..."

[அப்பாவின் குரல் கேட்ட குழந்தைகள் ஓடோடி வருகின்றன. சென்னியப்பன் அக் குழந்தைகளைத் தூக்கிக் கட்டி அணைத்து முத்தமிடுகிறான்.]

"தமிழரசி!...இதோ நீ கேட்ட ஏரோப்ளேன் பொம்மை! எங்கே எனக்கொரு முத்தம் கொடு!......செல்வா!......நீயுந்தான்!..."

"அட!...இது என்னங்க இது! என்றுமில்லாதபடி குழந்தைகளிடம் கொஞ்சுதல் அதிகமாக இருக்கிறதே!...அதனால்தான் நேற்றே மழைகூட பெய்ததோ! அட, நான் கேட்காமலேயே புதுப்புடவை!..." என்று கூறி ஆச்சரியப்பட்டாள் சென்னி.

"சென்னி!......நீ இன்றைக்கு அற்புதமான சமையல்செய்து அன்புடனே எனக்கு ஊட்ட வேண்டும்..."

"சின்னப் பாப்பா!......உங்களுக்கு ஊட்டி விடணுமா? தொட்டிலிலே படுத்துக் கொள்ளுங்க! நான் தாலாட்டுகிறேன்!...அட...இது என்னங்க புடவைக்குள்ளேயிருந்து கருப்புக் கொடி கீழே விழுகிறதே!..."

"உஸ்!...சத்தம் போடாதே!... போலீஸ்காரங்க காதிலே விழுந்தால் என்னையும் பிடிச்சு ஜெயில்லே போட்டிடுவாங்க! நம்ப அண்ணாதுரை, நெடுஞ்செழியன், செழியன், கருணாநிதி...அட கருணாநிதி கார் டிரைவரைக்கூட உள்ளே பிடித்து அடைத்து விட்டார்கள்!..."

"என்ன? அண்ணாவையா ஜெயில்லே போட்டிட்டாங்க? ஆமா, இவங்களுக்கெல்லாம் திடீருன்னு என்ன வந்திடுச்சி?..."

"அட......சத்தம் போட்டுப் பேசாதே!..."

"என்னங்க இது !...சுதந்திரம், பேச்சுரிமை எழுத்துரிமை, சமத்துவம் என்றெல்லாம் பேசி என்னை வோட்டு போடச்செய்தாங்க! இப்போ வீட்டிலேகூட சத்தம் போட்டுப் பேசக்கூடாதா?..."

"நீ சத்தம் போட்டுப் பேசினால் உன்னையும் என்னையும் கொண்டுபோய் சிறையிலே அடைத்து விடுவார்கள்! நான் சிறைக்குப் போகத்தான் போகிறேன்! அதற்காக நான் பயப்படவில்லை! ஆனால் நானைய கருப்புக் கொடி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதே!..."

"கருப்புக் கொடி காட்டினால் சிறையிலே தள்ளுவாங்களா? ஐயோ!...நீங்க எங்களையெல்லாம் விட்டுட்டு ஜெயிலுக்குப் போகத் தீர்மானிச்சுட்டீங்களா?..."

"அழாதே சென்னி! சிறைச்சாலை என்ன செய்துவிட முடியும்? பயப்படாதே!...சரி, சரி! அழுது ஒப்பாரி வைக்காமல் உள்ளே போய் சீக்கிரம் சமையல் செய்!..."

காட்சி : 2

[இலைகளைக் கழுவிப் போட்டு, சென்னி எல்லோருக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருக்கிறாள். சென்னியப்பன் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டிருக்கிறான். சென்னி ஓர் இலையில் உட்கார்ந்து சாதத்தைப் பிசைகிறாள். சென்னியப்பன் அதைப் பார்த்துவிட்டு.......]

"அட சென்னி! அவசர அவசரமாகச் சமையல் செய்து நீயே முதலில் சாப்பிட உட்கார்ந்து விட்டாயா ?..."

"நீங்கதான் பிசைந்து ஊட்டச் சொன்னீர்களே!....அதற்காக முன்பே பிசைந்து கொண்டிருக்கிறேன்!..."

"நல்ல வேளை! சாப்பிட்டுவிட்டு எங்களுக்காக நீயே சாப்பிட்டதாகக் கூறி எங்களை யெல்லாம் பட்டினி போடாமல் இதோடு விட்டாயே!...டேய் செல்வா! சாப்பிட வாடா; இல்லாவிட்டால் எல்லாவற்றையும் உங்க அம்மாவே சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டுடும்டா!..."

[இப்படிச் சிரித்துப் பேசிக் கொண்டே சாப்பிட உட்காரும் இன்பகரமான சூழ்நிலையிலே திடீரென்று போலீஸ்காரர்கள் வீட்டினுள் நுழைகிறார்கள். ஒரு போலீஸ்காரன் உணவிலிருந்த சென்னியப்பனின் கையில் விலங்கை மாட்டுகிறான். கைக்கெட்டிய உணவு அவன் வாய்க்கு எட்டவில்லை. அதைக் கண்ட சென்னி பதை பதைத்துப் போகிறாள்.]

சென்னி : என்னய்யா இது அக்ரமம்! அவர் என்ன குற்றம் செய்தார்? எதற்காக விலங்கு?......

போலீஸ்காரன் : உங்களுக்கெல்லாம் கட்சி என்ன வேண்டியிருக்கு?...... ஏன்டா சென்னியப்பா? நீயோ ஏழை! உனக்கு ஏன்டா இந்தத் தி. மு. க. வெல்லாம்? அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டு இப்படி எல்லாம் ஏன்டா திண்டாடுறே?

[அதற்குள் ஒரு போலீஸ்காரன் கீழே கிடந்த கருப்புக் கொடியைப் பார்த்து விடுகிறான்.]

மற்றொரு போலீஸ்: பார்த்தியாடா...! இவர் ஒரு தி. மு. க. புலியென்று நான் சொன்னது சரியாப் போச்சு! இதோ பார் கருப்புக்கொடி! இவரு கூட நேருவுக்கு மறுப்புக் கொடுக்கிறாராம், கழுதை!...

["நேருகால் தூசிக்கு நீ சமமடா தடியா!" எனக் கூறிக் கொண்டே போலீஸ்காரன் பூட்சால் சென்னியப்பனை அடிக்கிறான். சென்னியப்பன் 'ஐயோ! அப்பா!' எனக் கதறுகிறான்......... இதைக் கண்ட சென்னியின் கண்கள் சிவக்கின்றன.]

சென்னி : வாயை அடக்கிப் பேசுங்கய்யா ! கையையும் காலையும் கொஞ்சம் அடக்கி வையுங்க! ஏழைகளென்றால் எது வேண்டுமானாலும் செய்து விடலாமென்ற நினைப்பா? நீங்க இப்படிச் சொல்றதுக்குப் பெயர் தான் சுதந்திரமா? அகிம்சையா?... அவர் என்னய்யா தகாத குற்றம் புரிந்து விட்டார்?.........உங்களுக்குப் பிள்ளை குட்டி இல்லையா?...அட நீங்க நாசமாகப் போக!...

போலீஸ்: பார்த்தியாடா இவளுக்கிருக்கிற திமிரை! காங்கிரசாட்சியின் கொழுப்புடா.

[தொடர்ச்சி பக்கம்—8]

வெள்ளி 31-1-58 சென்னை

அபாய அறிவிப்பு!

"ஓகோ, கேளுங்கள் பாரத புத்திரர்களே! பரதகண்டம் என்னும் நம் பழம் பெரும் நாடு பல்லாயிரக் கணக்கான மைல் தூரத்திலுள்ள பரங்கியர் கையில் பல்லாண்டு காலமாக பிடிபட்டு அடிமைப் பட்டிருப்பதாலே, பொல்லாங்கு சூழ வாழ்வதோடு—பஞ்சம்—பட்டினி—பசி—நம்மைப் போசுக்கி, பசுூரணமாக்கிவிடுகிறது! ஆங்கிலேயரை ஆழ்கடலுக்கு அப்பால் துரத்தி விட்டோமேயானால், இந்த நாட்டின் மாலைகளாக அமைந்துள்ள ஆற்றிலெல்லாம், தேனும் பாலும் வெள்ளமாக ஓடும். தேவையானோர் தேவைக்கேற்ற அளவு தேனையும் பாலையும் அள்ளி அள்ளிப் பருகலாம்! மலர்த் தேனை வண்டு மொண்டு குடிப்பதைப்போல!" என்றெல்லாம் தொண்டை கிழிய, கேட்போரின் மண்டை குடைய, மேடை தோறும் கடல் மடை திறந்தாற்போல் 'தேசிய'த் தலைவர்களும் அவர்களது தொண்டரடிப் பொடி ஆழ்வார்களும் விடுதலை பிரச்சாரம் செய்தது இன்னும் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

இருநூறு ஆண்டுகளாக அன்னியரின் இரும்புப் பிடியிலே இருந்த இந்த உபகண்டமும் விடுதலை பெற்றது. ஆனால்...?

தேசியத்தார் எங்காள மிட்டதைப்போல், தெருவெல்லாம் தேனும், பாலும் ஓடவில்லை; ஆனால் தேம்பும் மக்களின் கண்ணீர் தான் வெள்ளமாக ஓடிக் கொண்டிருக்கிறது. தேனும், பாலும்கூடத் தேவையில்லை. தேம்பும் மக்களின் கண்ணீரையாவது துடைக்க வேண்டாமா இந்தத் துரைத்தனம்?

இந்தக் குறையை மறைக்க—போக்க அல்ல—கண்ணீர் வடிக்கும் இந்நாட்டுக் கண்மணிகளின் முன்னாலே, ஐந்தாண்டுத் திட்டம் என்ற மெல்லிய சல்லாத் துணியை வீசினார்கள், கணையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற நப்பாசையுடன்!

பளபளப்பாக இருக்கும் சல்லாத் துணி பார்க்கப் பரவசமூட்டும்; ஆனால் உடலிலே போர்த்திக் கொண்டால், மேனியை மறைக்காது; மேனியை அவனிக்கு எடுத்துக் காட்டும்.

அதைப்போல, இந்த ஐந்தாண்டுத் திட்டம் ஏட்டிலே படிக்க இனிக்கிறது. ஆனால் கவைக்குதவாதது! இது நாம் சொல்லும் தீர்ப்பல்ல; நாட்டின் நலனில் அக்கறை கொண்ட நல்லறிஞர்கள்—நாடு போற்றிப் புகழும் பொருளாதார நிபுணர்கள் வழங்கிய தீர்ப்பாகும்!

ஆனால் இந்த 'ஐந்தாண்டுத் திட்ட'த்தைத்தான் பறைசாற்றி ஓட்டு வேட்டையாடினார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள். அப்பொழுது கூறினார்கள், 'ஐந்தாண்டு திட்டம்' முடிவுறுமேயானால் இந்த நாட்டின் பொருளாதாரம் சீர்படும்; உணவு பற்றுக்குறையும் தீரும் என்று. ஆனால் இன்று நிலைமை என்ன?

உணவு பற்றுக்குறை!

இந்த நிலை வளருமேயானால், பசியும், பட்டினியும், பஞ்சமும் மக்களை வாட்டும் என்று கூறியவர்களுக்கெல்லாம் — உணவு இலாக்காவைக் கையிலே வைத்திருப்போர் கூறினார்கள்; "உணவு மண்டலத்தை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம்; நிவாரணக் கடைகளையும் திறந்திருக்கிறோம்; வெளிநாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்ய முயற்சிக்கிறோம்!" என்று!

மக்களும் நம்பினர்; நாமும் நம்பினோம், நாடாள்வோர் நம்மை நட்டாற்றில் விடமாட்டார்களென்று!

ஆனால் தற்போது வெளி வருகின்ற செய்திகளைக் கண்ணுறும் போது, நமது நெஞ்சு கலங்குகிறது!

"அன்னிய செலாவணி நிலைமைகள் மிகக் கஷ்டமானவையாக இருந்த போதிலும், உணவுப் பொருள் இறக்குமதி தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. தற்காலிகமாக பார்த்தால், உணவுப் பொருள் விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் குறைந்த பட்ச 'கண்டிரோல்' அமுல் செய்யுமாறு கூறுவது, திருப்திகரமாகவே இருக்கிறது. ஆனால் நிலைமைகளைக் கவனிக்குமிடத்து; ஒருபுறம் கட்டாயக் கொள்முதல்; மறுபுறம் 'ரேஷன்' முறையில் உணவு வழங்குதல்—இவை இரண்டும் கொண்ட முழுக்கட்டுப்பாடு, தவிர்க்க முடியாததாகத் தெரிகிறது" என்று திட்டக் குழுவின் பொருளாதார நிபுணர்கள் திட்டவட்டமாக இந்நாட்டின் உணவு நெருக்கடியை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்!

இது திட்டக்குழு நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள அபாய அறிவிப்பு!

ஆனால் மேடை கிடைக்கும் போதெல்லாம், பக்தவத்சலனார் பறைசாற்றத் தவறுவதில்லை—"நஞ்சையும், புஞ்சையும் அசைந்தாடும் காட்சி நெஞ்சைக் கவருகிறது. இனி உணவுப் பஞ்சம் தலையெடுக்காது" என்று. அது மாத்திரமல்ல; சமீபத்தில் திறக்கப்பட்ட நிவாரணக் கடைகளையும் மூட உத்திரவிட்டிருக்கிறார்.

ஆனால் திட்டக் கமிஷன் 'அபாய அறிவிப்பு'விட்டிருக்கிறது, உணவுக் கட்டுப்பாடு—'கண்ட்ரோல்'—ரேஷன் வரலாம் என்று!

இன்று நிலவிவரும் நிலைமைகளைக் கூர்ந்து பார்த்தால் எவ்வளவு பயங்கரமாக உணவு பிரச்சினை தலை எடுத்திருக்கிறது என்பது நன்கு புரியும்.

குடியரசு தினத்தன்று இராசேந்திர பிரசாத் விடுத்துள்ள செய்தியில், இந்தப் 'புலம்பல்' கேட்கிறது:

"தானியங்களைச் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். பல்வேறு பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். உணவுப் பழக்கங்களை அவசியமேற்படும்போது மாற்றிக் கொள்ள வேண்டும். அன்னிய நாடுகளிலிருந்து ஏராளமான அளவு உணவுப் பொருள் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது" என்று கூறியிருக்கிறார், படமெடுத்தாடும் உணவுப் பற்றுக் குறையைப்பற்றி! அவருக்கும், அவர் அமர்ந்துள்ள ஆசனத்திற்கும் தக்கவாறு அவர் கூறியிருக்கிறார், "தானியங்களை—சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். உணவுப் பழக்கங்களை அவசியமேற்படும்போது மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று!

அவர் பாவம், சாது. ஆகவே இந்த சமாதானத்தைக் கூறியிருக்கிறார்; முன்னவர்கள் கூறியதைப்போல், பருத்திக்கொட்டையைச் சாப்பிடுங்கள் என்று கூறாமல்! ஆனால் திட்டக்குழு கூறிவிட்டது, 'கண்ட்ரோல்' 'ரேஷனை'த் தவிர்க்க முடியாதென்று.

நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணும்போது இதுதவிர்க்க முடியாததுதான் என்று ஊர்ஜிதமாகிறது! சென்னையில் புழுங்கலரிசியின் விலை மூட்டை ஒன்றுக்கு ஒரு ரூபாய் அதிகரித்துள்ளது என்று 'மார்க்கெட்' செய்தி கூறுகிறது.

கேரள மாநிலத்தில், உணவுப் பற்றுக் குறையைச் சமாளிக்க **1,000** டன் மரவள்ளிக் கிழங்கு வத்தல் சேமிக்க திட்டமிட்டுள்ளது, அந்த அரசு!

இவைகள் எதைக் காட்டுகின்றன?

உணவுப் பற்றுக்குறை!

அதன் விளைவு?

மீண்டும் உணவுக் கட்டுப்பாடு—ரேஷன்—கூப்பன்-கட்டாயக் கொள்முதல்—பதுக்குதல்—கள்ள மார்க்கெட் முதலியன!

இந்த நாட்டில் முன் "ரேஷன்" அமுலாக்கப்பட்டபோது, ஏற்பட்ட எல்லா தொல்லைகளும் மீண்டும் ஏற்படும் என்பதை நாம் கூறத் தேவை இல்லை.

கள்ள:மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடித்த பழைய பெரும் பெருச்சாளிகள் மீண்டும் நாட்டில் உலவ ஆரம்பிப்பார்கள். கூம்பிப் போன முகத்துடனும், காய்ந்துபோன கும்பியுடனும் பாமர மக்கள் 'ரேஷன்' கடை முன்னாலே நிற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். சட்டத்தை ஆளவந்தார்கள் அதிதீவிரமாக அமுல் நடத்தினாலும், சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக் கொண்டு கள்ள மாக்கெட்காரர்கள் தப்பித்துக் கொள்ளுவார்கள்.

இறுதியில் ஏழை மக்கள் அவதிக்குள்ளாவார்கள். இந்த நிலைகளை ஆராயும்போது, 'ரேஷன்' முறை அமுலாக்கப்பட்டால், வீண் தொல்லைகள்தான் அதிகரிக்கும். ஆகவே அம்முறையைக் கைவிட்டு வெளிநாடுகளிலிருந்து அதிக உணவு தானியங்களை இறக்குமதி செய்து, இந்தப் பற்றுக்குறையைப் போக்க ஆளவந்தார்கள் முன்வர வேண்டும்.

"வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்தால் அன்னிய செலாவணி கரையும். திட்டம் முழுவதையுமே பின்னுக்கு இழுக்கிறது" என்று இராசேந்திர பிரசாத் அங்கலாய்க்கிறார்.

இப்பொழுது உள்ள பிரச்சினைகளில் உணவுதான் முக்கியமே தவிர இவர்களது 'உதவாக்கரை'த் திட்டமல்ல.

'மனிதனுக்கு உணவுதான் முக்கியபிரச்சினை' என்பதைக் கோல் கொண்டார் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். ஆகவே அந்நிய செலாவணி கரைந்தாலும் அதைப் பொருட்படுத்தாது வெளிநாடுகளிலிருந்து உணவும் பொருள்களை இறக்குமதி செய்து, திட்டக் கமிஷன் விடுத்துள்ள அபாயத்தைத் தடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

காளை நெஞ்சம்

பட்டாள நடை என்று வர்ணிப்பார்களே — உண்மையிலேயே இராணுவத்திலிருந்து சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்த பட்டுசாமி அந்த நடையில்தான் நடந்து வந்து கொண்டிருந்தான்.

காக்கி உடை; உயர்ந்து பரந்த நெற்றியைப் பாதி அளவுக்கு மறைத்துக் கொண்டிருக்கும் பெரிய குல்லாய்; மார்புக்குக் குறுக்கே தண்ணீர்ப் பை; பக்கத்திலே அவன் பெட்டி, படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு ஒரு கூலியாள்—இந்தப் பின்னணியோடு நெப்போலியனைப்போல கிராமத்திற்குள்ளே நுழைந்தான், பட்டுசாமி.

அதோ, அவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த மாந்தோப்பு; மரத்தில் ஏறுமலேயே கை நீட்டி இளநீர் பறித்த தென்னந் தோட்டம்; நீர் யானையைப் போல பொழுதெல்லாம் நீச்சலடித்துக் கொண்டிருந்த வெட்டாறு!

வெட்டாறு...

—அதை நினைக்கும்போது 'சட்'டென்று அவன் நினைவுக்குச் சிறகு முளைத்தன!

மார்கழி மாதத்து அதிகாலை நேரத்தில பசும் நொம்பு ஒன்றைச் சிறிது அசைத்து விட்டால் 'பொல பொல'வென்று கொட்டுமே பனித் துளிகள்— அதுபோலத்தான் அந்த வெட்டாற்றங்கரையில் அவன் பார்வை பட்டதும் பழங்காலச் சம்பவங்கள் அவன் உள்ளத்திலே விழுந்து மோதின!

பெட்டி படுக்கை தூக்கி வந்த பையனை இருக்கச் சொல்லிவிட்டு; இராணுவத்திலே அவன் 'மேஜர்' ஆனதால் அவனுக்கு அளிக்கப்பட்டக் கைத் துப்பாக்கி நனைந்து விடுமே என்பதைப் பற்றக் கூடக் கவனிப்படாமல் பட்டுசாமி வெட்டாற்றிலே இறங்கினான்.

ஆற்றிலே வெள்ளம் முன்னோக்கி ஓடிற்று; அவன் சிந்தனையோ பின்னோக்கி ஓடிற்று.

★

அன்று பதினெட்டாம் பெருக்கு. பாவையர் கூட்டம் வெட்டாற்றங்கரையைப் படையெடுத்தபடி இருந்தது.

கும்மியடித்துப் பாடுவோர்; குத்துவிளக்கு ஏற்றி வைத்து இறை வணக்கம் செலுத்துவோர்; புத்திகெட்டத் தனமாய் பண்டைப் பெரியவர்கள் செதுக்கி வைத்த ஒப்பற்ற ஓலைச் சுவடிகளை ஆற்றோட்டத்தில் மிதக்க விடுவோர்— இவர்களின் கூட்டம் எந்த ஆண்டையும்போலவே அந்த ஆண்டும் குறைவில்லாமல் இருந்தது!

அந்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையிலே திடீரென்று "அய்யோ" — என்ற அலறல்!

தென்னை மரத்து உச்சியேறி செவ்விளநீர் பறித்துக் கொண்டிருந்த பட்டுசாமி திரும்பிப் பார்த்தான்.

தலை தெறிக்கும் வேகத்தோடு ஓடிக்கொண்டிருந்த வெட்டாறு வனிதை யொருத்தியையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தது.

பட்டுசாமி யோசனைக்குக்கூட நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. தென்னை மரத்து உச்சியிலிருந்து 'தொப்' பென்று தண்ணீரில் குதித்தான்; தையலின் கூந்தலைக் கையிலே பிடித்தவாறு அவளைக் கரைக்கேற்றினான்.

அவளைக் கரை சேர்த்த அதே பட்டுசாமி தவறிப்போய் கரை காண முடியாத கடலொன்றில் விழ்ந்து விட்டதை அவனால் அப்போது உணர முடியவில்லை!

பங்கஜம் — புரோகிதத்தை விட்டுப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக வைத்தியத்தில் கை தேர்ந்து விளங்கும் பஞ்சாபகேச

மாறன், எம்.ஏ.

அய்யரின் தங்கை! வேறு எந்த நேரமாயிருந்தாலும் அவளைத் தொடுவதற்குக் குடியானவ வகுப்பைச் சேர்ந்த பட்டுசாமிக்கு உரிமை கிடையாது.

ஆனால் அன்று அவன் பங்கஜத்தைத் தொட்டுக் கரை சேர்த்ததைப் பற்றி யாரும் குறைகூறவில்லை; நன்றியே தெரிவித்தனர்.

இதன் பிறகு நடந்ததை விவரிக்கவும் வேண்டுமா?

தண்ணீர்க் குடம் இடையில் ஏந்தி; தத்தித் தத்தி வரும் அந்த அன்னநடைக்காரியை அவன் தினம் தினமும் வெட்டாற்றங்கரையில் சந்தித்தான்.

முதல் நாள் நன்றி சொன்னாள்; அடுத்த நாள் சிரிப்பு தந்தாள்; பின்வரும் நாட்களில் தன்னையே ஒப்புவித்தாள்.

பின்னர்?

ஊர் வாய்க்கு அவல் கிடைத்தது. ஏற்கனவேயே கோபத்தில் சாட்சாத் விசுவாமித்திரர் என்று பெயர் பெற்ற பஞ்சாபகேச அய்யர் பாவும் புலியானார்; தன் பரம்பரைக்குப் பாவம் வந்து சேர்ந்ததே—என்று புலம்பினார்.

பங்கஜம் சிறைப் பறவையானாள்; பட்டுசாமி தனி மரமானான்.

விளைவு...?

பட்டுசாமி அருமைத் தாய் தந்தையரையும்; ஆசைக்கொரு தங்கையையும் விட்டுவிட்டு யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் இராணுவத்தில் சேர்ந்தான்!

★

சாதாரணச் சிப்பாய் பட்டுசாமியாக ஊரைவிட்டு ஓடி 'மேஜர்' பட்டுசாமியாக ஊர் திரும்பியிருக்கும் அவனுக்கு வெட்டாற்றுச் சுழல் சொல்லிக் காட்டிய சோகக் கதை இதுதான்!

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அதற்குள் அந்தச் சிற்றூரிலேதான் என்னென்ன மாற்றங்கள்!

அவன் கை நீட்டிக் காய் பறித்த தென்னை மரங்கள் அண்ணாந்து பார்க்க வேண்டிய அளவுக்கு வானோங்கி நிமிர்ந்து நிற்கின்றன!

அதோ, அன்று இடிந்தும் இடியாததுமாய் காட்சியளித்த அவன் வீடு ஒரு பக்கத்துச் சுவற்றை இழந்து; அவன் உள்ளம்போல் காட்சியளிக்கிறது!

அதோ, அந்தக் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துதான் அவன் தந்தையார் கந்தசாமி சுருட்டு பிடித்துக் கொண்டிருப்பார்!

அதற்குப் பக்கத்தில் நடுக்குவிர்த்து; சுருக்குப் பையிலிருந்து கொழுந்து வெற்றிலை எடுத்துக் கொழுந்துக்கு மடித்துக் கொடுப்பார்கள் அவன் அன்னை பொன்னம்மா!

அதோ, அந்த இடத்தில் தான் தங்கை மேனகா அய்யர் வீட்டிலே வேலைகளை முடித்து ஆடுகளுக்குத் தீனி வைப்பாள்!

நான்கு ஆண்டுகள் — இந்த இடைக் காலத்திற்குள் மேனகா எவ்வளவு பெரிய பெண்ணாக வளர்ந்திருக்கிறாளோ!

—மனக்கண்ணால் ஒருமுறை தங்கையின் உருவத்தைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டான்! அவளுக்காக அவன் வாங்கி வந்திருக்கும் பட்டுப் புடவையை அவனிடம் நீட்டும் போது எவ்வளவு ஆனந்தப்படுவாள் மேனகா!

—ஒருமுறை தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்!

அதோ, வீடும் வந்து விட்டது. வெளியிலே கந்தசாமி வழக்கம்போல் சுருட்டு பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"அப்பா!"

—ஓடிச் சென்று கட்டியணைத்துக் கொண்டான் பட்டுசாமி!

ஆனால்...?

அப்பா முகத்திலே ஆனந்தமில்லை!

செத்துப்போனதாகக் கருதப்பட்டவன் உயிரோடு—உயர்ந்த நிலையோடு—திரும்பி வந்திருக்கிறான்; ஆனால் செத்தபிணம் போலக் காட்சியளித்தார், அப்பா!

விநாடிகள் பல ஓடிவிட்டன, "வா மகனே!" என்று அவர் வாய் திறந்து அழைப்பதற்கு!

அதற்குள் உள்ளேயிருந்து "ஆ! அய்யோ!" என்ற அலறல் அவன் காதுகளைப் பிளந்தது.

"என்ன அப்பா அது சப்தம்?"

"உன் தங்கை..."

"...உடம்பு சரியில்லையா?"

"ஆமாம்; பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறாள்!"

"என்ன? என் தங்கச்சி தாயாகப் போகிறாளா? எப்போது அப்பா திருமணம் நடந்தது? எங்கேயப்பா என் மைத்துனர்?"

"............"

"ஏனப்பா பேசாமலிருக்கிறீர்கள்? அய்யோ, எனக்குப் பயமாக இருக்கிறதே! என் மைத்துனருக்கு ஏதாவது......?"— என்று பட்டுசாமி இழுத்தான்!

அப்போதும் கந்தசாமி மௌனமாகவே இருந்தார்!

இந்த சிறு இடை நேரத்தில் வாசற் கதவு திறந்தது.

"தம்பி...மகனே! வந்து சேர்ந்தியா? இவ்வளவு நாள் எங்களை யெல்லாம் விட்டுட்டு எங்கேயடா போயிருந்தே?"

—உள்ளேயிருந்து ஓடி வந்த அருமைத் தாய் சொரிந்த ஆனந்தக்கண்ணீரின் வார்த்தை வடிவம் இது! அதைத் தொடர்ந்து ஆலிங்கனம்; மெய்மறந்த நிலை!

"அது கிடக்கட்டும் அம்மா! தங்கைக்குத் தலைப் பிரசவமாம்...மைத்துனர் எங்கே?"

"மைத்துனரா? மண்ணாங்கட்டி! எங்கேயோ தப்பு செஞ்சுட்டு இவ்வளவு நாள் மறைச்சு வச்சிருந்து நம்ப மானத்தையே விலை கூறி வித்துவிட்டாடா, உன் தங்கச்சி!"

"ஆ!"

—ஆயிரம் விளக்குறிகளும் கேள்விக்குறிகளும் அவன் அகன்ற முகத்தை ஆக்ரமித்தன!

"அம்மா! யார் அந்தக் கொடியவன்? எங்கே இருக்கிறான் அந்தக் காட்டுமிராண்டிப் பயல்?"

"அதைத் தாண்டா ஆயிரம் தடவை கேட்டுட்டேன். வாய் திறந்து ஒரு வார்த்தைகூட சொல்லமாட்டேங்கிறா..."

[தொடர்ச்சி பக்கம்—9]

மதுரை மாவட்ட

தி. மு. க. மாநாடு

பழனியில்

மார்ச் 8, 9 தேதிகளில்

நடைபெறும்.

எழுத்தறிவித்தவனுக்கு ஏழ்மை; என்று மாறுமோ இந்த நிலைமை!

ஊருக்கு இளித்தவாயன் யார்?

'பிள்ளையார் கோவில் ஆண்டி'—என்று பழமொழி சொல்வார்கள்.

ஆனால் இன்றைய நிலையில் ஆண்டிகளெல்லாம்கூட புத்திசாலிகளாக இருக்கிறார்கள்.

ஒரு ஊரில் ஆண்டிகள் நல்ல விதமாக இருக்கிறார்கள் என்பதே அந்த ஊரில் இளித்தவாயர்கள் பலர் இருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுவதாக ஆகிவிட்டது.

ஆனால் அதற்குப் பதிலாக ஒரு புதிய பிரிவினர் அந்த ஸ்தானத்துக்கு உரியவர்களாக ஆகிவிட்டார்கள் இப்போது.

அவர்கள் கையில்தான் வருங்காலம் சிக்கியிருக்கிறது, ஆனால் அவர்கள்தான் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்!

யார் அவர்கள்?

ஆரம்ப ஆசிரியர்கள்தான்!

குறைந்த ஊதியம்; மிகவும் பொறுப்பு வாய்ந்த கடமை—என்கிற ரீதியிலே அவர்களது தொழில் அமைந்து விட்டது!

நாட்டை பல்வழிகளிலும் முன்னேற்றுவதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தார்கள்.

வெறும் ஆலைகளையும் சாலைகளையும் பெருக்கி விட்டால் மட்டும் ஒரு நாடு வெகுவிரைவில முன்னேறி விடாது.

அவற்றைவிட வெகுவாகப் பெருக்கப்பட வேண்டியது வேறொன்று உண்டு.

அதுதான் கல்வி!

இன்று வெளிநாடுகளிலிருந்து தலைசிறந்த விஞ்ஞானிகளும் பொறிஇயல் வல்லுனர்களும் சாரை சாரையாக வந்து பிரமாண்டமான ஆலைகளையும் அணைக்கட்டுகளையும் அமைத்துக் கொடுத்துவிட்டுப் போய் விடுவார்கள்.

நாளை அவை இங்கேயே நிலை பெற்று இருக்க வேண்டுமானால்; பிறர் உதவியின்றி தன் முயற்சியில் இயங்க வேண்டுமானால் அதற்கு வல்லுனர்கள் தேவை!

அந்த வல்லுனர்களைத் தயாரிப்பது கல்வி!

அந்தக் கல்வியின் முன்னேற்றம் இதர எந்தத் துறையின் முன்னேற்றத்தையும்போலவே மிகவும் முக்கியமானது!

—ஆனால் இந்த நாட்டிலோ வாய்ச் சொல்லில் அன்றி வேறு எந்த விதத்திலும் கல்வித் துறை முன்னேறவில்லை.

மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாக்கா ஆசாதின் சொந்த விவகாரமாகவும்; ஆமை வேகத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டவும் திகழ்கிறது.

சென்னை அரசாங்கத்தின் கல்வி இலாக்காவோ குழப்பத்தின் தொட்டிலாகத் திகழ்கிறது! ஒரு ஐந்தாண்டுகளுக்கு நிலையான கல்வித் திட்டம் இருந்தது என்டதற்கு காங்கிரஸ் மந்திரிசபை வரலாற்றிலேயே சான்று காட்ட முடியாத நிலை இங்கே!

ஆரம்பக் கல்வி என்பது எடுப்பார் கைப் பிள்ளையாகக் காட்சியளிக்கிறது!

ஆரம்ப ஆசிரியர்களின் நிலையோ நாம் முன்பு குறிப்பிட்ட 'இளித்தவாயர்களின்' நிலைதான்!

சமீபத்தில் செங்கற்பட்டு மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் பேசிய அமைச்சர் சுப்ரமணியம் கீழ்க்கண்டவாறு பேசினாராம்:

"ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளை நானறிவேன். முக்கியமாக அவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவு என்பதும் தெரியும். வருங்கால சந்ததிகளின் சுபீட்சம் ஆசிரியர்களின் சந்தோஷ வாழ்க்கையைப் பொறுத்திருக்கிறது. பதினொன்கு வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால், ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதற்குச் சாத்தியமில்லாமலிருக்கிறது."

—போதிய ஊதியமில்லாமல் மிகவும் வாடுகிறார்கள், ஆரம்ப ஆசிரியர்கள். அந்த இழிநிலை போக்க மார்றுரைக்காமல் அந்த இழிநிலை ஏன் ஏற்பட்டது—என்பதற்கு எங்கேயோ ஒரு காரணத்தைத் தேடிக் கண்டு பிடித்துச் சொல்கிறார், அமைச்சர்!

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது பழமொழி.

அந்த இறைவனே வயிற்றுக்கும் இரையின்றி வறியனாய் அல்லல் படுகிறான்!

[தொடர்ச்சி பக்கம்—10]

ஒரு மனிதர் நாடகம்!



அநேகமாக கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டில் பேசிய எல்லா முக்கியமான தீர்மானங்களின் பேரிலும் பிரதமர் பேசினாராம்.

—'சங்கர்ஸ் வீக்லி'

ஆசிரியர் வேலாயுதம் மன்ற கட்டிட நிதி

சிறப்புக் கூட்டம்

9—2—57 ஞாயிறு காலை 9-30 மணிக்கு

மாயூரம் சண்முகா டாக்கீசில்

மூதாட்டி

இராமாமிர்தத்தம்மையார்

தலைமையில்

மு. கருணாநிதி

காஞ்சில்

கி. மனோகரன் எம். ஏ.

சொற்பொழிவாற்றுவார்கள்.

கட்டணம்: ரூ. 2, 1. அணா 8

முன் இதழில்...

[தூக்கிலே தொங்கிய அப் பெண்ணை நீச்சட்டி சிங்காரம் சமயபுரம் திருவிழாவில சந்தித் திருக்கிறான். நீச்சட்டியிலே எலுமிச்சை ஊற்றிய அவனுக்குத் திலகமிட்டபோது...தன் கவனத்தையும் அவன் பக்கம் விட்டு விலக்கிறான். பார்வையை அவன் மேலேயே பதித்திருந்த காரணத்தால், பாதி ஆட்டத்திலேயே நீச்சட்டியையும் கீழே போட்டு உடைத்து விடுகிறான். வாழ்க்கையிலேயே முதல் முறையாக! கோவில் நிர்வாகியின் மூலம் அவள் பெயர் 'மைனா' என்று அறிந்தபோடு, இருக்குமிடம் தேடிச் செல்கிறான்......

சாத்தப்பட்டிருந்த மைனாவின் வீட்டுக் கதவை மெதுவாகத் திறக்கிறான். உள்ளே அவளும், அவளது அணைப்பிலே அவளுடைய அருமந்த பூனைக்குட்டியும் உறக்கத்திலாழ்ந் திருக்கிறார்கள். ஆனால் நீச்சட்டி சிங்காரமோ அவளது கழுத்திலே அவன் எதிர்பார்த்திராத 'தாலி'யைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிட முயல்கிறான். கால் இடற—பாத்திரம் உருள— பூனை அவள் கழுத்திலே பிராண்ட—விழித்த மைனா "கில்" என்று கத்துகிறாள்........

* * *

8

மைனாவின் கூச்சலைக் கேட்டு சிங்காரம் சிறிது திடுக்கிட்டாலுமினும் வெளியே ஓடி விட முயலாமல் புதிய தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அப்படியே நின்று விட்டான்.

மைனாவும் அவனை உற்றுப் பார்த்தாள். "தெரியவில்லையா யாரென்று? விளக்கை எடுத்து முகத்தைப் பாரேன்!" என்று சாவதானமாகச் சொன்னான் சிங்காரம். வீட்டுக்குள்ளே நுழைந்த ஒரு ஆடவன், அகப்பட்டுக் கொண்ட பிறகும், நிதானமாகவும், துணிவாகவும் பேசுவது அவளுக்குப் புதிராகத் தோன்றியது. மாடத்தில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கை எடுத்து அவன் முகத்துக்கு நேரே பிடித்தாள். அவள் கரம் அவளையறியாமல் நடுங்க ஆரம்பித்தது. திடீரென அவள் கண்கள் தரையை நோக்கிக் கவிழ்ந்தன. இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. இரவு நேரத்தில் யாரோ ஒருவன் — கொலைகாரனோ, கொள்ளைக்காரனோ திடீரென்று வீட்டுக்குள் புகுந்து விட்டான் என்ற அதிர்ச்சியில்கூட அவளுக்கு ஏற்படாத நடுக்கமும், தடுமாற்றமும் — அவன் யாருமில்லை; சிங்காரந்தான் எனத் தெரிந்த பிறகு அவளை ஆட்டிப் படைக்கத் துவங்கின. அவளாலேயே கட்டுப் படுத்த முடியா[illegible]வளாக்கு குமுறிற்று. மார்கழி [illegible]த்தில் வைகறைக் குளிரில் குளத் தோரத்தில் அமர்ந்திருப்பவருக்கு ஏற்படும் உதறல் அவளது ஒவ்வொரு அங்கத்திலும் தாண்டவமாடியது. விளக்கொளியும் அவளோடு சேர்ந்து நடுங்கியது. அவள் நிலையை சிங்காரம் புரிந்து கொண்டான். தன்னுடைய திடீர் பிரவேசத்தால் ஆபத்து ஏதும் நிகழ்ந்து விடாது என்ற நம்பிக்கை பிறந்து விட்டது அவனுக்கு.

மெதுவாக, "மைனா!" என்றான்.

"என் பெயர் எப்படித் தெரியும் உங்களுக்கு?"—அவள் இது போலக் கேட்கவில்லை. வியப்பை விழிகளில் நிறைத்துக்கொண்டு அவனை ஒருமுறை பார்த்தாள்.

"என்மேல் கோபமா?" என்று அவளிடம் நெருங்கினான். அவள் அவனை விட்டு சுவற்றுப் பக்கம் போனாள். மனித ஜாதியின் மர்மங்களைப் புரிந்து கொள்ளாத பூனைக் குட்டி, ஒளியுமிழும் கண்களால் அவர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது. சிங்காரம் இன்னும் நெருங்கினான். மைனாவின் கண்களிலேயிருந்து நீர் பெருகிற்று.

"ஏன் அழுகிறாய்?" என்றவாறு சிங்காரம் அவள் கரத்தைப் பிடித்தான். அவள் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள். அந்த அழுகை, சிங்காரம் இன்னும் அதிகமாக அவளைத் தொட்டு ஆறுதல் கூறுவதற்கான வாய்ப்பை அளித்தது.

"அழாதே! அழாதே!...இப்படி உட்காரு!"

சிங்காரம் அவள் தோளில் அணைத்தவாறு அவளைக் கீழே உட்காரவைத்தான். அவளும் தலைகுனிந்தவாறு உட்கார்ந்து கொண்டாள். கெளி கெளியாகச் சுருண்டிருக்கும் அவளது கருங் கூந்தலைக் கையால் கோதிய சிங்காரத்திற்கு, அந்த விரல்களின் வழியாக மின்சாரம் பாய்ந்து தன்னைப் பிரக்ஞை இழக்கச் செய்வது போன்ற உணர்ச்சி பீறிட்டுக் கிளம்பியது. ஆனால் அந்த நிலையில் அவன் மிருகமாக மாறிவிட விரும்பவில்லை. சிங்காரத்தின் தோற்றம் — பேச்சு — நடை, உடை, பாவனை—வாயிலிருந்து விகம் கள் வாடை இவைகளைக் கவனிப்பவர்களுக்கு சிங்காரம் ஓர் அழகான பெண்ணின் பக்கத்தில் மனிதப் பண்போடு அமர்ந்திருந்தான் என்பது நம்ப முடியாத சேதியாகத்தானிருக்கும். அழகிய உருவும் — அந்தஸ்து ஆஸ்தி மிகுந்த நிலையும்— பார்ப்பதற்குப் பசுவின் தோற்றமும் உடைய எத்தனையோ பேர் பகல் நேரத்துப் பத்தினிகளாகவேதான் இருக்கிறார்கள் என்பதை ஆடவர் பெண்டிர் இரு சாராரிலும் சகஜமாகக் காண முடிகிறது. இதை யாரும் மறுக்க முடியாதது போலவே பார்வைக்குப் புலிபோல் காட்சியளிக்கும் சிங்காரமும் இயற்கையாகவே இழிகுணமற்றவன் என்பதையும் யாரும் மறுத்து விட இயலாது.

அவள் அழுவதை நிறுத்தவில்லை. அவளை எப்படியாவது பேச வைக்க வேண்டுமென்று சிங்காரம் தீர்மானித்துக் கொண்டான்.

"கொஞ்சம் தண்ணி வேணும்!"

மைனா, எழுந்து மண்குடத்திலேயிருந்த தண்ணீரை ஒரு குவளையில் பிடித்து வந்து அவனிடம் கொடுத்தாள். கொடுக்கும்போதும் அவள் கைகள் நடுங்கின.

குவளையை உதட்டில் வைத்து நீர் பருகிய சிங்காரம், "தூ தூ! ...அப்பா! அப்பா!" என்று சப்தமிட்டு தண்ணீரை யெல்லாம் கீழே துப்பி விட்டு, வாயைத் துணி கொண்டு பரபரப்போடு துடைத்துக்கொண்டான்.

மைனாவுக்கு விஷயம் விளங்கி விட்டது. உப்பு வைத்திருந்த படியைக் குவளையென்று நினைத்து அதிலே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டாள். பட படப்பிலே நடந்துவிட்ட தவறு! "மன்னிச்சுக்குங்க! வாய் கொப்பளிக்க வேற தண்ணி வேணுமா?" என்று புன்முறுவலோடும் — அந்தப் புன்முறுவலை உடனே மறைக்கும் சோகப் பார்வையோடும் கேட்ட மைனாவை இறுகத் தழுவிக் கொள்ளத் துடித்தது சிங்காரத்தின் நெஞ்சம். ஆயினும் அவள் கழுத்திலே மின்னுகிற தாலி, அவன் பாய்ச்சலைத் தடுத்திடும் உயர்ந்த வேலியாகக் குறுக்கே நின்றது.

"தண்ணி வேண்டாம்—இப்போது எனக்கு வேண்டிய தெல்லாம் நீ ஏன் அழுகிறே என்ற காரணந்தான்!" என்று சிங்காரம் தழுதழுத்த குரலில் அவள் முகத்தைப் பார்த்தவாறு பதில் கூறினான்.

அவ்வளவு நேரத்துக்குப் பிறகு, தொடர்பில்லாத கேள்வி

-யாக—அவளுக்கே தேவையற்றது என்று தெரிந்தும்கூட— ஒரு கேள்வி பிறந்தது; "நீங்க ஏன் இங்க வந்தீங்க?" என்று!

"தீச்சட்டி ஆடும்போது நீ ஏன் என்னை அப்படிப் பாத்தே? அதனாலதான் வந்தேன்!"

"தயவு செஞ்சு போய்டுங்க!"

"ஏன் மைனா — என்னைப் போகச் சொல்றே?"

"உங்க காலைப்பிடிச்சு கெஞ்சுறேன்; தயவு செஞ்சு போயிடுங்க!"

"போகமாட்டேன். உன்னைப் பத்தி எனக்கு விவரம் தெரிஞ்சாகணும். என் ஆசையை நிறைவேத்திட்டுப் போகத்தான் வந்திருக்கேன்னு நினைக்காதே! முதல்ல நான் வந்தது உன்னைப் பார்க்கணும் என்கிற ஆவலாலே! இப்ப, உன்னைப் பார்த்தபிறகு நீ யாரு; ஏன் இப்படி அழுது அழுது உருகிப்போறே — அப்படிங்கிற விஷயமெல்லாம் எனக்குத் தெரியணும்; மைனா—தெரியணும்!"

"என்னைப்பத்தி நீங்க தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க?"

"உனக்கு உதவி செய்ய முடியாத அளவுக்கு—அப்படி சக்தியற்றவன்னு என்னை நினைக்கிறியா?"

"அய்யோ — நாம ரெண்டு பேரும ஏன் சந்திச்சோம்? அட தெய்வமே—என் வாழ்க்கையை குட்டிச்சுவராக்கினது போதாதா? இப்ப இது வேற விபரீதமா?"

"மைனா! உன் வாழ்க்கை குட்டிச்சுவராகி விட்டதா?...... குட்டிச்சுவருக்குக்காவலாக ஒரு கழுதைபோல நான் இருக்கிறேன் — கவலைப்படாமல் எங்கிட்டே விஷயத்தைச் சொல்லு!"

"நான் கல்யாணமானவள்!"

"தெரியும் எனக்கு !"

"தெரியுமா? எப்படி?"

"உன் கழுத்திலே இருக்கிற தாலியை முன்னாலேயே பாத்துட்டேன்!"

"ஆ—தாலியைப் பார்த்துட்டீங்களா ?"

"ஏன்—புருஷன் கண்ணுக்குத் தவிர வேறயாரு கண்ணுக்கும் தெரியாத சந்திரமதி தாலியா உன் தாலி?"

வழிந்த கண்ணீரால் நனைந்திருந்த அவள் உதடுகளில் குறுஞ் சிரிப்பு மின்னி மறைந்தது.

"தாலியைப் பார்த்த பிறகுமா என்னைத் தொட்டீங்க?"

"தாலி போட்டுக் கொண்ட பிறகு நீ மாத்திரம் என்னை உயிரை வாங்குகிற மாதிரிப் பார்க்கலாம்; நான் மாத்திரம் உன்னைத் தொடக்கூடாதோ?"

"என்னை நானே மறந்து தப்பு பண்ணி விட்டேன். மன்னிச்சுடுங்க. தயவு செஞ்சி போய்டுங்க. என்னைக் காப்பாத்துங்க !"

"உன்னை ஒரு தொந்தரவும் செய்றது இல்லை—கடவுள்மேல் சத்தியம்! இதோ, ஒதுங்கி உட்கார்ந்துக்கிறேன். நீ விஷயத்தைச் சொல்லு; உன் புருஷன் இப்ப எங்கே?"

"உயிரோடதான் இருக்கார்!"

"அது தெரியுது; நீ மஞ்சள் குங்குமத்தோட இருக்கும் போதே அது தெரியுது! எந்த ஊர்ல இருக்காரு?"

"கோயம்புத்தூருக்குப் பக்கத்திலே பேரூர்ல இருக்காரு!"

"அப்பறம் ஏன் அவரை விட்டுட்டு இப்படி வந்தே?"

"தெய்வம் என் தலையிலே அப்படி எழுதியிருக்கு; அதனால வந்தேன்!"

"புருஷனுக்கும் உனக்கும் ஏதாவது சண்டையா?"

"அய்யோ — தங்கமானவர் அவரு! அவருக்கும் எனக்கும் சண்டை ஏன் வரப்போகுது!"

"தங்கமான புருஷன்னு நீயே சொல்றே—அப்பறம் ஏன் இப்படி ஆச்சு? ஓகோ! மாமியாருக்கும் உனக்கும் ஒத்துக்கொள்ளவில்லையோ? அடாடாடா!...... இந்த மாமியாருங்க மருமகள்களைப் படுத்துற பாடு...ரொம்பக் கொடுமை.........ரொம்பக் கொடுமை! தானும் ஒரு காலத்திலே மருமகளாயிருந்தோம் இறதையே மறந்துடுராங்க! உன் மாமியாரும் அப்படித்தானா மைனா?"

"அய்யோ, எனக்கு மாமியாரே கிடையாதே!"

"நாத்தனாரு யாராவது?..."

"அதுவும் இல்லிங்க!"

"அப்பறம் என்ன தகராறு? புருஷன், இந்தக் கண்ணகியை விட்டுட்டு யாராவது மாதவி வீட்டுக்கு......"

"அதெல்லாமில்லை.......அவர் அப்படியெல்லாம் போகக் கூடியவரல்ல!"

"வேறு என்னதான் காரணம்? நீ சொல்லித்தான் ஆக வேண்டும்!"

"அய்யோ — அந்தப் பேச்சை அதோட நிறுத்துங்க...நான் அதை நினைச்சு நினைச்சு அழுதது போதும் — அந்தக் கதையை மறுபடியும் சொல்லி, ரெண்டு பேரும் சேர்ந்து அழவேண்டாம்!"

மைனாவிடமிருந்து எப்படியும் அவளது சோகக் கதையின் மர்மத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று சிங்காரம் துடியாய்த் துடித்தான். வேறு வழியின்றி அவளும் சொல்ல ஆரம்பித்தாள்; இடையிடையே விம்மி விம்மி அழுதவாறு:

"நான் பிறந்தது சிங்காநெல்லூர்—பஞ்சாலைத் தொழிலாளி என் அப்பா—ஒரே பெண் அவருக்கு நான். ஆலை வேலையில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு நானும் அப்பாவும் வயிறு கழுவி வந்தோம். எனக்கோ வயது பதினாறைத் தாண்டி விட்டது. ஆண் பிள்ளைகளின் பார்வை என்மீது விழத் தலைப்பட்டது. காச நோயினால் கஷ்டப்படும் அப்பாவுக்கு, எப்படியாவது அவர் கண் மூடுவதற்குள் எனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்து விட வேண்டுமென்று ஒரே ஆசை அடித்துக் கொண்டது.

"நானும் கல்யாணம் செய்து கொள்ளவேணும் என்கிற முடிவுக்கு வந்து விட்டேன். அப்பா எங்கெங்கோ மாப்பிள்ளை பார்த்தார். அவர்களையெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் எனக்குப் பிடித்தமான மாப்பிள்ளையை நானே தேர்ந்தெடுத்து அப்பாவிடம் சொன்னேன். அப்பாவும் என் இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் சொல்லாமல் சரியென்று தலையசைத்தார். என் கணவரை எங்கே எப்படித் தேர்ந்தெடுத்தேன் என்று சொல்லவில்லையே...ஒரு நாள் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டுவிழா அதிவிமரிசையாக நடத்தினார்கள். அந்தக் கொண்டாட்டத்தில் நாடகமொன்றும் ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். "அல்லி அர்ச்சுனா" நாடகம்! அதில் அர்ச்சுனனாக நடித்தவரின் நடிப்பு அபாரமாக இருந்தது. அவர் மேடைக்கு வந்தாலே ஒரு [illegible]ன்! ஒரே கரகோஷம்! சுருள் கம்பிபோல வளர்ந்து அடர்ந்து காதுகளை மறைத்துக் கொண்டு கழுத்தைத் தொடுகிற அழகான கேசம்! முத்துக்களை எடுத்து வரிசையாக அடுக்கி வைத்ததுபோல பற்கள்! செக்கச் சிவந்த மேனி! கச்சிதமான மீசை — கம்பீரமான பார்வை! அவர் அல்லியைக் கொள்ளை கொண்டதாகத்தான் கதை! ஆனால் அவர் என்னை அப்படியே கொள்ளை கொண்டு விட்டதாக எண்ணினேன்.

"நாடகம் முடிந்தது. வீட்டுக்கு வந்தேன். இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. ஒரே "அல்லி அர்ச்சுனா" கனவுதான்! மறுநாள் அப்பாவிடம் கொஞ்சமும் வெட்கமின்றி நான் அந்த அர்ச்சுனனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று முடிவாகக் கூறி விட்டேன். அப்பா, அந்த நடிகரைப்பற்றி விசாரித்தார். அவர் பெயர் ராஜபார்ட் பீதாம்பர பாகவதர்! 'மகளே! நான் போய் பீதாம்பரத்தைப் பார்த்து வருகிறேன். கல்யாணம் முடிகிற வரையில் விஷயம் ரகசியமாக இருக்கட்டும். ஒருவேளை அந்த பாகவதர் சம்மதிக்கவில்லை என்றால் ஊரிலே நம்மைப்பற்றி இண்டலாகப் பேசுவார்கள்!' என்று கூறிவிட்டு அப்பா புறப்பட்டார். அதற்குள் நான் என் அர்ச்சுனரின் விலாசத்தைக் கேட்டறிந்து, என்னுடைய போட்டோப் படம் ஒன்றையும் வைத்து, என்னை எப்படியும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவசரமாகக் கடிதம் எழுதினேன். என் படத்தைப் பார்தத அவர், அப்பாவிடம் தன்னுடைய சம்மதத்தை அறிவித்து கல்யாணத்துக்கு நாளும் குறித்து விட்டார்.

"மாப்பிள்ளை வீடான பேரூரிலேயே கல்யாணம் சிக்கனமாக நடந்து முடிந்தது. மாப்பிள்ளை கோலத்திலேகூட என் கணவர் அர்ச்சுனனைப் போலவே ராஜபார்ட் உடையில் இருந்து என்னை அதிக மயக்கத்தில் ஆழ்த்தினர்.

"கல்யாணத்தன்றைக்கே 'முதல் இரவு' ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. வாழ்க்கையில் நானாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட என் இஷ்ட தெய்வத்தைத் தனியாக சந்திக்கப் போகிறோம் என்ற அளவில்லாத சந்தோஷத்தோடு படுக்கையறையில் அடியெடுத்து வைத்தேன். என் உடம்பெல்லாம் ஏதோ ஒரு உணர்ச்சியால் பரபரப்படைந்தது. அவர் நிலைக் கண்ணாடிக்கு நேரே நின்று தன் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் உள்ளே சென்றதும் என் கையைப் பிடித்து அருகே அழைத்து கட்டிலில் உட்கார வைத்தார். நாணம் தாங்கமுடியாமல் நான் உட்கார்ந்தேன் — என்னை, நானே அல்லி ராணியாகக் கற்பனை செய்து கொண்டேன். பழங்கள் சாப்பிட்டோம். பால் அருந்தினோம். அவர் அங்கிருந்த விளக்கை வாயால் ஊதி அணைத்துவிட்டார். கூடத்துக் கடிகாரத்தில் மணி ஐந்து அடித்தது. விழித்துக்கொண்டேன். அறைக்குள்ளே வெளிச்சம் பரவியிருந்தது. அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த முக்காலியில் ஏதோ ஒரு பொருள் பளபளவென்று மின்னியது. அதை கவனித்துப் பார்த்தேன். இரண்டு வரிசைப் பற்கள்! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவரைக் கூர்ந்து கவனித்தேன். அவருடைய வாயிலேயிருந்த பற்கள்தான்!

"அய்யோ! பொக்கை வாய்க் கிழவரா என் கணவர்?" என்ற ஆத்திரத்தோடு—சிறிது நம்பிக்

[தொடர்ச்சி பக்கம்—12]

பொங்கிய பொங்கல்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களையெல்லாம் இப்படிப் பேச வைக்குது!

சென்னி: சும்மா நிறுத்தய்யா! என்னமோ ஓட ஓட விரட்டுகிறாயே! ''சிப்பாயைக் கண்டு அஞ்சும் காலமும், ஊர்ச் சேவகன் வருதல் கண்டு மனம் பதைக்கும் காலமும், துப்பாக்கி கொண்டு ஒருவன் வெகு தூரத்தில் வந்து விட்டால் வீட்டினுள் ஒளியும் காலமும்'' இதுவல்ல போலீஸ் புலிகளே!......காலம் மாறிப் போச்சு!......நீங்க அவரைச் சிறையிலடைத்தால் நான் கருப்புக் கொடி காட்டப் போகிறேன்!

போலீஸ்: இவள் கையிலேயும் விலங்கை மாட்டி, நாய் மாதிரி தெருவிலே இழுத்துக்கிட்டுப் போடா!...

சென்னி: ஐயா! உங்களுக்குப் புண்ணியம் உண்டு! குழந்தைகளை மட்டும் தூக்கிக் கொள்கிறேன்!...

போலீஸ்: குழந்தைகளென்ன செத்தாப் போய்விடும்? குழந்தைகள் கருப்புக் கொடி காட்டுவதாக கூறவில்லையே!...... அவர்களை எப்படி கைது செய்வது? அக்கம் பக்கத்திலே இருப்பவங்க அவைகளுக்கு இரண்டு சோறு போடுவாங்க...நீ போடி!

காட்சி: 3

[சிறையில் சிறைக் கதவுகளை அகண்ட விழிகளுடன் பார்த்துக் கொண்டு சென்னியப்பன் அமர்ந்திருக்கிறான். பொங்கலுக்குக்கூட அவர்களை வெளியே விடவில்லை. ஏதேதோ இல்லாத குற்றங்களை[illegible] சாட்டி அவர்[illegible] அண்ணா முதலியோர் இருந்த அதே அடையாறு சிறையில் அடைத்து விட்டனர்.]

சென்னி: அட, என்னங்க அந்தக் கம்பிகளோடு ஏதோ பேசுகிறீர்களே; அந்தக் கம்பிகள் பதில் கூறுகின்றனவா?

சென்னியப்பன்: சென்னி! சிறைக் கதவு பேசுவது உன் காதுகளிலே விழவில்லையா? ''இவ்வளவு நாட்களாக, நான் தோன்றிய நாளிலிருந்து கொலைகாரர்களையும், கொள்ளைக்காரர்களையும்தான் நான் கண்டிருக்கிறேன்! அண்ணாத்துரை, கருணாநிதி முதலியோரைக் காண வேண்டுமென்ற ஆசைதான்! ஆனால் என்னால் நகர முடிந்ததா? கல்லுக்கும் இரங்கும் காமராசர் என் குறைகளைக் கேட்டார்! இரக்கமுள்ள காமராசர் உடனே ஆயிரமாயிரம் அரசியல் கைதிகளை என்னை வந்து பார்க்கச் செய்து விட்டார்! காமராசர் ஆட்சியிலே என்னுடைய குறைகள்கூட கவனிக்கப்படுகிறது! நீ ஏன் கவலைப்படுகிறாய்?...'' என்று இந்தச் சிறைச்சாலை கதவு கேட்பது உன் காதுகளிலே விழவில்லையா சென்னி?

[அப்பொழுது இரண்டு போலீஸ்காரர்கள், கையில் ஏதேதோ பத்திரிக்கைகளுடன் வந்து அந்தச் சிறைச்சாலை முன்னே அமர்ந்து கொண்டு படிக்கிறார்கள்.]

போலீஸ்காரன் (255): டேய் 360! நேற்று மீனம்பாக்கத்திலே நடந்த அக்ரமங்களைக் கேட்டியாடா? போலீஸார் மனிதர்கள் தானடா? இவர்களுக்குக்கூட மனித இதயம் இருக்கிறதாடா? எனக்கு மட்டும் வேறு பிழைக்கும் வழியிருந்தால் வேலையை ராஜினமா செய்து விட்டுத் தி. மு. க. வில் சேர்ந்து விடுவேன்! நான் ஆஸ்பத்திரியில் சேர்த்த தி. மு. க. தோழர்கள் பலரில் இருவர் இறந்து விட்டார்களாம் அது தவிர, தடியடிக்குள்ளாகிய பல்லோரின் அழுகுரல் பரங்கிமலையிலே எதிரொலித்ததாம்!

சென்னியப்பன்: [சென்னியிடம் இரகசியமாக] பார்த்தாயா சென்னி; போலீஸ்காரர்களிலேயும் நல்ல இதயம் படைத்தவர்கள் இருக்கிறார்கள்!

சென்னி: அவர்கள் பேசிக் கொள்வதைக் கவனிப்போம்!

போலீஸ் (360): அப்பா, அது என்ன பத்திரிக்கை? சப்—இன்ஸ்பெக்டர் வரும்போது சட்டைக்குள் மறைத்து வைத்திருந்தாயே!

255: இது தி. மு. க. பத்திரிக்கை அல்ல! ஆனால் இதில் உள்ள அறிக்கையைப் படித்தால் கண்ணீர் வருகிறது. ஜன நாயகக் காங்கிரஸ் பிரமுகர்களான திரு. எல். எஸ் காரையாளரும், திரு. மாரிசாமியும் (பேரிகை ஆசிரியர்) கீழ்கண்டவாறு எல்லாப் பத்திரிக்கைகளுக்கும் அறிக்கை விட்டுள்ளார்கள்: ''மீனம்பாக்கத்திலே நடந்த கோரமான சம்பவத்தைப் பார்த்தோம். கருப்புக்கொடி ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது போலீசார் இஷ்டப்படி தடியடிப் பிரயோகம் செய்துவந்தனர். கூட்டம் அமைதியாக இருந்[illegible]தாகவும் நேருஜிமுன் ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்ததாகவும் எங்களுக்குத் தெரிய வந்தது. போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்ததைப் பார்த்தோம். ஜனங்கள் தாறுமாறாக அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். தடியடிப் பிரயோகத்திற்கு அவசியமே இல்லை. ஜனங்கள் இரக்கமின்றி அடிக்கப் பட்டதைப் பார்த்தோம். இதில் பாதசாரிகளுக்கு விலக்கில்லையென்பது தான் ஆச்சரியமாக இருந்தது. சைமன் கமிஷன் பகிஷ்கார காலத்திலே நடந்ததையே இது ஞாபகப் படுத்தியதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இக்காலத்திலும் இவ்விதம் இக்காரியங்கள் அனுமதிக்கப் படுகின்றனவென்பது வியப்பாகவே இருக்கிறது. இவ்விதம் தாக்கப் பட்டதற்கு வெகு முன்னரே நேருஜி போய்விட்டாரென்பது தெரிகிறது. இவ்வித எதிர்ப்பை சமாளிப்பதில் சென்னை சர்க்காரும் போலீசாரும் நிதானமே இழந்து விட்டாரெனத் தோன்றுகிறது. குறித்த முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்படுகிறது. சென்னையில் தடியடிப் பிரயோக மூலமும், முதுகுளத்தூரில் துப்பாக்கி மூலமும், இவ்வுரிமையை மறுப்பதனால் நமது குடியரசை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!'' பார்த்தாயா 360! இதுமட்டுமல்ல; அந்தப் 'பேரிகை' பத்திரிக்கையிலே முதல் பக்கத்திலே வந்த செய்தியைக் கேள்! ''கொலைகார மந்திரி சபைக்கு சென்னையிலே இருவர் பலியாயினர்—தி. மு. க. நடத்திய போராட்டத்திலே சர்க்கார் நடந்துகொண்ட அடக்குமுறை அக்கிரமம் — கையை எடுத்துக் கும்பிட்டவர்களைக் கூடத் தாக்கினார்கள்—மந்திரி சபை சூழ்ச்சியால்தான் இப்படி ஆந்திர போலீசைக் கொண்டு தாக்கினார்களா?... அன்று நடந்த அடக்குமுறையைப் பார்த்தபோது இது காங்கிரஸ் சர்க்கார்தானா என்கிற ஐயப்பாடே எழுந்தது. மீனம்பாக்கம் அருகே இரத்தம் கொட்டக் கொட்ட அடித்தார்கள்.

இக்கலவரத்திலே இருவர் உயிர் நீத்ததாக செய்திகள் வந்த போது நாம் அதை நம்பவில்லை. ஏனெனில் மீனம்பாக்கம் அருகே விழுந்த அடிக்கே பலர் பலியாகி இருப்பார்களென எண்ணினோம். நல்ல வேளையாக அங்கு அடிபட்டவர்களுக்கு ஆயுசு கெட்டியாகஇருந்திருக்கிறது. இல்லையெனில் சாவுப் பட்டியல் நீண்டிருக்கும்!''— நேரிலே கண்ட பேரிகை ஆசிரியர் இப்படி எழுதியுள்ளார்! 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடுகூட இதைக் கண்டித்துள்ளது. ஆனால் ஒரு சில தேசிய இளைஞர் காங்கிரஸ் தோழர்கள் ''தி. மு. க. காட்டுமிராண்டித்தனம்!'' என அச்சடித்த நோட்டீசுகளை ஒட்டித் தப்புப் பிரச்சாரம் செய்கிறார்களாம்! இப்படித் தடியடிப் பிரயோகம் நடத்திவிட்டுக்கூட அவர்கள் கட்சிப் பிரச்சாரம் செய்கிறார்கள்!...

[போலீசாரின் இந்த உரையாடலைக் கேட்ட சென்னியும் சென்னியப்பனும் கண்ணீர் விட்டு அழுகிறார்கள்]

சென்னியப்பன்: சென்னி!... என்னால் கண்ணீரை அடக்க முடியவில்லை! நம்மைப் போன்று பலப்பல ஆயிரக் கணக்கானவர்களைச் சிறையிலே போட்டும், மக்கள் அமைதியாக கொடி காட்டியிருக்கிறார்கள்! பொதுமக்களை இப்படியா குண்டாந் தடியால் அடித்துக் கொல்வது? ''நேருவே நீ நாக்க!'' என முதன்மந்திரிக்கு நாம் அறிவுரை கூறியதற்காகவா இந்தத் தண்டனைகள்? இந்நாட்டில் பிரதமர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் காமராசர்தானா? கொலைபுரிவதிலே அடக்குமுறையிலே வல்ல ஒரு கொலைகார நாகராஜரா? இந்த நாகராஜரை, திருவள்ளுவர் 'வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்', 'கடுஞ்சொல் வேந்தன்', 'கண்ணில்லாத வேந்தன்' 'இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச் சொல் வேந்தன்' என்ற சொற்றொடர்களால் வர்ணிக்கிறார். சென்னி! இந்த அடக்குமுறைக்கு ஒரு முடிவு காலம் உண்டா?

சென்னி: உலகிலே அடக்குமுறை ஆட்சி என்றுமே நீடித்ததில்லை! மக்கள், ''அல்லற் பட்டு ஆற்றாதழுத கண்ணீர் துளிகளே'' இந்த அடக்குமுறை ஆட்சியைக் கரைத்து அடித்துக் கொண்டு போய் விடும்! அடுத்த பொங்கலுக்குக்கூட இந்த ஆட்சி நிலைக்குமா என்பது சந்தேகமே!...

''வலியோர் சிலர் எளியோர்
தமை வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையா மெனும் நினைவா?''

[''கொலைவாளினை எடடா! மிகு கொடியோர் செயலறவே!'' என்ற திரு பாரதிதாசன் பாட்டைத்தான் நாம் பாடி ஆறுதலடைய வேண்டும்!]

—'' இன்பபுரியான் ''

சேலம் மாவட்ட

தி. மு. க.

3-வது மாநாடு

1958 பிப்ரவரி 15, 16
சனி, ஞாயிறு நாட்களில்
வேலூர் (சேலம்) அழகிரி பந்தலில்
நடைபெறும்.

★

தலைவர்: மு. கருணாநிதி
திறப்பாளர்:
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

★

அறிஞர் அண்ணா,
நாவலர் நெடுஞ்செழியன்,
கழக முன்னணியினர் பலர் கலந்து கொள்வர்.

★

இரு நாட்களிலும் கலைநிகழ்ச்சி உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:
ரூ. 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி — பொருளாளர்
ப. இராமலிங்கம் — செயலாளர்
ஜி. பி. சோமசுந்தரம் — வ. கு. தலைவர்
இரா. தாண்டவன்—தொண்டர் படைத் தலைவர்

காளை நெஞ்சம்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

"சொல்லமாட்டேன் என்கிருளா? அதைக்கூட அவள் சொல்லித்தான் நீங்கள்தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்பா! அம்மா! நீங்கள் யார்மீதும் சந்தேகப்படவில்லையா?"

"அப்படியொன்றும் தெரியவியேடா, மகனே!"

"அடுத்த வீட்டு கோவிந்தசாமி?"

"அவன் ஊரை விட்டுப் போய் இரண்டு வருஷங்கள் ஆகின்றனவே!"

"தலையாரி தருமலிங்கம்?"

"அவன் போன வருஷந்தானே காலராவிலே கண்ணை மூடினன்!"

"இனியும் என்னல் தாங்க முடியாது அம்மா! என் தங்கையின் வாழ்விலே தணலைக் கொட்டிய அந்தக் கொடியவன் யாரென்று நானே கேட்டு விடுகிறேன்...மேனகா!...மேனகா!"

"நில்லு; நில்லு.........இப்ப உள்ளே போகாதே! ஒரு வழியாய் பிரசவம் முடிஞ்சுடட்டும்"

—தாய் தடுத்தாள். துடிக்கின்ற மீசையையும்; வெடிக்கின்ற உள்ளத்தையும் கட்டுப்படுத்த முடியாமல் கூண்டிலே அடைபட்ட புலியைப் போல திண்ணையை அளவெடுக்கும் வேலையில் ஈடுபட்டான், பட்டுசாமி!

யாராயிருக்கும் அந்த அயோக்ய சிகாமணி? யாருக்கும் தெரியாமல் அபலையொருத்தியின் வாழ்விலே நஞ்சு தடவிய நயவஞ்சகன் எவனுயிருக்கும்?

—அவன் தலைக்குள்ளே எரிமலையொன்று அக்னிக் குழம்பைக் கக்கிக் கொண்டிருந்தது!

அவன் மட்டும் அகப்பட்டுக் கொண்டால்......? தங்கையின் வாழ்வையும்; தங்கள் நிகர் குடும்ப கௌரவத்தையும் தரைமட்டமாக்கிய அந்தத் தறுதலை மட்டும் கிடைத்து விட்டால்...?

—ஒருமுறை பட்டுசாமி கைத்துப்பாக்கியைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

மீண்டும் தெருக்கதவு திறந்தது. அம்மா வெளியே தலை காட்டினள்.

"சுகப் பிரசவம்! ஆண் குழந்தை! ஆண் குழந்தை!!"

—மானம் பறிபோன அந்த நேரத்திலும் அந்தத் தாயுள்ளம் அந்தச் செய்தியைப் புன்னகையோடுதான் வெளியிட்டது!

ஆண் குழந்தை!

அவமானச் சின்னம்'

விபசாரத்தின் விளம்பரப் பலகை!

—அவன் உள்ளத்தில் உதித்த இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் கன்னத்திலே 'பளார்; பளார்' என்று அறை கொடுப்பதுபோல் இருந்தது.

"இந்தாங்க; உங்களைத்தானே!" கொஞ்சம் போயி நம்ப அய்யர்சாமி டாக்டரைக் கூப்பிட்டுக்கிட்டு வாங்களேன்!"—தாயின் கோரிக்கை இது!

"யார்? அந்த மூல வியாதிக்காரனையா?"—சீறினன் பட்டுசாமி!

வீட்டுக்குத் திரும்பியவுடன் முதல் செய்தியே அவன் மூளையைக் கலக்கியிருந்தது. அதற்கு அடுத்தபடியாக யாருடைய கொடுமையால் அவன் இந்தக் கதிக்கு ஆளானுனே அந்தப் பெரிய மனிதனையா பார்க்க வேண்டும்?

அப்பா கந்தசாமியை ஒரு மாதிரியாகப் பார்த்தான்; அவரோ அவனுக்குமேல் ஆத்திரமாக இருந்தார்.

"பாழாப்போன சிறுக்கிக்கு வைத்தியம் வேற கேட்குதோ? அவ மறுபடியும் கண் விழிக்காம அப்படியே எமலோகம் போய்ச் சேரட்டும், போ!"

"என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க? உங்க மனசு என்ன கல்லா இரும்பா? இப்ப நீங்க போகப்போறீங்களா? இல்லே; நான் போகட்டுமா?"

—கந்தசாமி அதற்குமேல் வேறொன்றும் பேசவில்லை; பேசாமல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

பொன்னம்மாவும் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்.

பட்டுசாமியும் துப்பாக்கியைப் பையிலிருந்து எடுத்து அதில் ரவைகள் சரியாகப் பொருத்தியிருக்கின்றனவா என்று ஒன்றுக்கு இருமுறைகள் பார்த்துக் கொண்டான்.

"தம்பீ, வா! உள்ளே தங்கச்சி உன்னைப் பார்க்கணுங்குது!"—அம்மாவின் அன்பழைப்பு இது!

துப்பாக்கியை மீண்டும் எடுத்த இடத்தில் சொருகிக் கொண்டு பட்டுசாமி தங்கையையும்பார்க்கநேர்ந்ததேஎன்ற ஆளாத் துயரத்தோடு உள்ளே அடியெடுத்து வைத்தான்!

"அண்ணு!" என்று தாவியணைத்துத் தழுவிக் கொண்டாள், மேனகா!

"தங்கச்சி! இந்த வேலை செய்யலாமா நீ? ஊருக்கெல்லாம் புத்தி சொல்லும் உத்தமியென்று நினைத்துக் கொண்டிருந்தேனே! நீயா இப்படிக் கண்களை மூடிக்கொண்டு பாழுங்கிணற்றில் வீழ்வது?"—பட்டுசாமி மனதில் எண்ணியதையெல்லாம் பேசினுன்!

இவ்வளவுக்கும் மேனகா பதில் கூற வேண்டுமே! கண்களை மூடிக்கொண்டே சாய்ந்தான்; 'பொல பொல' வென்று கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது!

"தங்கச்சி! நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும்! அந்த அக்ரமக்காரன் யார்? அவன் எங்கு இருக்கிருன்? அதை மட்டும் தயவு செய்து சொல்லு தங்கச்சி!......தங்கச்சி!......இப்போது சொல்லப்போகிருயா இல்லையா?.........நான் மிகவும் கோபக்காரன்......சொல்லு......உம்...சொல்லு..."

—பட்டுசாமி அவளைப் பிடித்து உலுக்கினுன். ஆனல் விளைவென்னவோ கல்லில் கயிறு திரிக்க முயன்ற கதைதான்!

"தங்கச்சி! நீ பயப்படாதே! நீயாக அவன் யாரென்பதைச் சொல்லிவிட்டால் நான் அவனை ஒன்றுமே செய்யமாட்டேன்...சொல்லு தங்கச்சி!...நீ அண்ணனுக்குத் தரும் மரியாதை இவ்வளவுதானு? உனக்கு என்மீது கொஞ்சம் கூட அன்பு இல்லையா? இவ்வளவு ஆண்டுகள் கழித்து உனக்காகத்தானே நான் திரும்பி வந்திருக்கிறேன்! இல்லையேல் மணிப்பூரிலேயே ஒவ்வொரு வெடி குண்டிலிருந்து தப்பும்போதும் உனக்காகத்தானே உயிரை வைத்துக் கொண்டிருந்தேன்! தங்கச்சீ......தயவு செய்து சொல்லு தங்கச்சீ..."

—சங்கீத வித்வான் வெவ்வேறு விதமாக ராகத்தை ஆலாபனை செய்வதுபோல் கோபமாகவும், கண்டிப்பாகவும், அன்பாகவும்—பல விதங்களில் பட்டுசாமி அவளைக் கேட்டுப் பார்த்தான்.

அவளோ பதில் ஏதும் சொல்லாமல் 'ஓ'—என்று அழத் தொடங்கிவிட்டாள்.

அதற்குள் வாசலில் வண்டி மாட்டுச் சலங்கையொலி கேட்டது.

ஆமாம்; பட்டுசாமியை இராணுவ மேஜராக மாற்றிய பஞ்சாபகேச அய்யர் தான் வந்திருக்கிருர். எந்தக் குடியானவனது காதலால் தனது அன்புத்தங்கை குடும்ப கவுரவத்தைக் கொளுத்திப் பொசுக்கி விடுவதாக நினைத்தாரோ அதே பஞ்சாபகேச அய்யர்தான் வந்திருக்கிருர்!

இந்த நேரத்தில் இவர் முகத்தில் விழிப்பானேன்?—என்று நினைத்தபடி பட்டுசாமி தாழ்வாரத்தில் ஒரு ஓரமாக உட்கார்ந்தான்.

கந்தசாமி கைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு முதலில் உள்ளே நுழைந்தார்.

"ஏ, புள்ளே! அந்த உடைஞ்சுபோன முக்காலியை எடுத்து இப்படிப் போடு!"

—அரை நொடியில் நோயாளியின் கட்டிலுக்கருகில் முக்காலி போடப்பட்டது.

கனபாடி பஞ்சாபகேச அய்யர் சாவாதானமாக உள்ளே நுழைந்தார்.

அவர் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்—"அத்தான்!" என்று அலறியபடியே கட்டிலிலிருந்து கீழே விழுந்தாள், மேனகா!

அவ்வளவுதான் தாமதம்! பட்டுசாமிக்கு விஷயம் விளங்கி விட்டது!

"டுமீல்!"

"டுமீல்!"

துப்பாக்கி வேட்டுகள் முழங்கின. அதைத் தொடர்ந்து இரு பிணங்கள் மண்ணில் சாய்ந்தன!

இந்த வேட்டு சப்தம் கேட்டு உலகம் இன்னதென்று தெரியாத அந்தப் பச்சைக் குழந்தை வீரிட்டுக் கத்திற்று.

பட்டுசாமி சனியனை முடுக்கி விட்டு, அந்தப்பக்கமும் துப்பாக்கியைத் திருப்பினுன்!

"வேண்டாமடா மகனே!"—என்று குறுக்கே விழுந்தாள் பொன்னம்மா!

தங்கை மேனகாவின் கதை இப்படி நடந்தது! புராண காலத்து மேனகாவுக்கும் இப்படி ஒரு சகோதரனிருந்திருந்தால் அந்த விசுவாமித்திரர் கதியும் இப்படித்தான் ஆகியிருக்குமோ!

வருந்துகிறோம்

வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களின் தந்தை திரு. ஏ. வி. இராமன் அவர்கள் **29-1-58** அன்று பிற்பகல் **3-30** மணிக்கு இயற்கை யெய்தினுர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திரு. ஏ. வி. இராமன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 1892–ல் பிறந்தவர். பச்சையப்பன் பள்ளியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் படித்துத் தேர்ந்து, பின், உயர்தரப் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றுர். அங்கு உடல் நலத் தொழிலியலில் நல்ல முறையில் தேர்ச்சி பெற்றுத் திரும்பினுர். முதலில் சேலம் நகராண்மைக் கழகத்தில் பணியாற்றத் தொடங்கினுர். பின் அரசாங்க அமைப்பில் சேர்ந்து, சென்னை அரசாங்கத்தின் அந்தத் துறையில் உள்ள உயர்ந்த பதவிக்கு வந்து பணியாற்றினுர். 1945–ல் அரசாங்கப் பதவியைவிட்டு நீங்கினுர். பிறகு சில காலம் உதயப்பூர், திருவாங்கூர் போன்ற சுதேச சமஸ்தானங்களில் பொதுநல அமைப்புகள் பற்றிய முக்கிய ஆலோசகராக இருந்தார்.

'மக்கள் நலம்' (பப்ளிக் ஹெல்த்) என்ற தொழில்துறை நுணுக்கம் மிகுந்த சிறந்த பத்திரிகையை ஐந்தாண்டுகள் நடத்தினுர்.

திரு. ஏ. வி. இராமன் தமிழ் மொழியில் சிறந்த பயிற்சியும், மொழி வளர்ச்சியில் தணியா ஆவமும் காட்டி வந்தவர். அவர் ஆரம்பித்த ஆங்கிலம்—தமிழ் அகராதி இன்னும் முடிவு பெறவில்லை. இறக்கும்வரை, அந்த வேலை அவரது கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

1954, செப்டம்பரில் இருதய நோயால் பாதிக்கப்பட்டு, அதிலிருந்து அதிக நடமாட்டம் இல்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார். தோழர் வி. பி. இராமன் அவர்கள் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற முன்வந்ததை மிகுந்த உற்சாகத்துடன் ஆதரித்ததல்லாமல், கழக வளர்ச்சியில் இடைவிடாமல் நல்ல ஆர்வத்தைக் காட்டி வந்தார்.

ஏ. வி. இராமன் அவர்கள்தான் லண்டனிலுள்ள ராயல் சானிடரி என்சினியரிங் சொசைட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.

திரு. ஏ. வி. இராமனின் மறைவு கேட்டு அவருடைய பல நண்பர்களும், கழகத் தோழர்களும் இல்லம் வந்து ஆறுதல் தந்து சென்றனர்.

திரு. ஏ. வி. இராமனின் பிரிவாற்ருது துயரும் வி. பி. இராமனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நமது அன்பு கலந்த ஆறுதலை அளிக்கின்றோம்.

பிறைவானம் ...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

கழுகு தின்னப் பார்த்தது?" என்றான், வேடன் தனக்குள். அவன் முகத்தை ஏறிட்டு நோக்கியது குருவிக் குஞ்சு.

அவன் முகத்தில் அன்பின் சாயலைக் கண்டது அது. ஆபத்தில்லை என்றும் எண்ணியது.

வேடன் நடந்து கொண்டே இருந்தான். அவன் எங்கே போகிறான்? குருவிக் குஞ்சு யோசித்தது. 'ஒரு வேளை என் அம்மாவைத் தேடிக் கொண்டு செல்கிறானோ; என்னை ஒப்படைக்க?' என்று நினைத்தது; சபல புத்தி அதற்கு.

நடந்து கொண்டிருந்த வேடன் தெரு வழியே இருந்த ஒருமரத்தின் அடியில் நின்றான். அங்கே ஒரு ஜோசியர் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஜோசியம் பார்க்க வருவார்களா யாராவது என்று !

" ஐயா, ஜோசியரே! உனக்கு அருமையான குருவிக் குஞ்சு கொண்டு வந்திருக்கிறேன்...... இன்னும் இறக்கைகள் கூட முளைக்கவில்லை. இப்போதே நன்றாக பழக்கினால் உமக்கு நல்ல துணையாக இருக்கும்!" என்றான் வேடன்.

நாலணா கை மாறிற்று. குருவிக் குஞ்சு அந்தக் 'குருவி ஜோசியனி'டம் சிக்க விட்டது.

●

நாட்கள் பல நகர்ந்தன.

அந்தக் குருவிக் குஞ்சு இப்போது நன்றாக வளர்ந்து குருவியாகி விட்டது. இறக்கைகள் கூட நன்றாக முளைத்து விட்டன. அது இப்போது தன் ஆசைபோல் பறக்க முடியும். ஆனால் இறக்கைகள் தான் வெட்டப்பட்டு விட்டன. இன்றல்ல; இனி என்றுமே அது பறக்க முடியாது; பறக்கலாம் என்று நினைக்கவும் முடியாது; ஏன் — அது சிறைப் பறவை தானே!

இது எப்படி நேர்ந்தது ?

ஆசையால் வந்தவினை—அவசரத்தால் நேர்ந்த தீமை—எண்ணிச் செயல்படாமையால் உற்ற சோகம்!

அத்தனைக்கும் இது 'மகத்தான கண்டுபிடிப்பு' எதுவும் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் இரண்டு வரியில் அடைத்து விட்டுப்போன உண்மைதான்!

" எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு "

இந்தக் குறளுக்கு விளக்கம் தேவையா? வாழ்க்கையையே இருளாக்கிக் கொண்ட குருவிக் குஞ்சியின் கதைதான்!

—சொர்ணம்

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOOO

தி. மு. க.
சிறப்புக் கூட்டம்

துறையூர் பாரதி தியேட்டரில், 4—2—58 காலை 8 மணிக்கு

தலைவர்:
த. பெ. சௌந்தரராசன்

சொற்பொழிவாளர்கள்:
மு. கருணாநிதி
நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். ராமசாமி
அம்பில் தருமலிங்கம்
டி. பி. அழகமுத்து

நன்கொடை: ரு. 1, அணா 8, 4.

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOOO

அய்யோ; 'ஜனசக்தி'யே!

"நமது தி. மு. கழக உறுப்பினரும், சிறந்த தொழிற் சங்க ஊழியருமான தூத்துக்குடித் தோழர் தாளமுத்துவை, கம்யூனிஸ்டக் கட்சியைச் சேர்ந்த நீதிராசன், பலரும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே, பட்டப் பகலில், கடைத் தெருவில் வெட்டிக் கொன்றான். அவனை விசாரித்த நீதிமன்றம், அவனைக் கொலைக் குற்றவாளி எனத் தீர்மானித்து, அவனுக்குத் தூக்கு தண்டனை வழங்கியது.

அந்தச் செய்தியை 10—10—57 'நம் நாடு' இதழில் முதல் பக்கத்தில் 'கம்யூனிஸ்டுத் தலைவருக்குத் தூக்குத் தண்டனை' எனத் தலைப்பிட்டு வெளியிட்டிருந்தோம். அத்தலைப்பு கண்டு 'ஜனசக்தி' இதழுக்கும், அதை இயங்கி வரும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் ஆத்திரம் பொங்கிவிட்டது.

அவ்வாத்திரத்தின் காரணமாக 'ஜனசக்தி' ஏடும், தூத்துக்குடி 'பிள்ளை'யும், கொள்கை நிர்ணயக் குழு உறுப்பினர் ஒருவரும் தூற்றல் வேட்டுகளைக் கொடுத்துள்ளனர்.

அவ்வாறு தூற்றல் வேட்டுகளைத் தொடுத்தவர்கள், எந்த அளவு உண்மையை மறைத்துச் செயல்பட முனைந்திருக்கிறார்கள்—தாங்கள் கூறுவது நூற்றுக்கு நூறு வடிகட்டின பொய் எனத் தங்களுக்குத் தெரிந்தும்கூட எந்த வகையில் மனச்சாட்சியே அற்றவர்களாக நடந்து கொள்ளத் துணிகின்றார்கள்—இப்படித் தங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள உண்மைகளையே மறைத்தும் திருத்தியும் பேசத் துணிகின்றவர்கள் வேறு எந்தப் பாதகத்தைத் தான் செய்யத் துணிய மாட்டார்கள்!

இந்த நீதிராசன் யார் தெரியுமா? வேறு யாருமில்லை; தி. மு. கழகத் தோழர் தாளமுத்துவை வெட்டிச் சாய்த்தவன்தான். கம்யூனிஸ்டுக் கட்சியினராக இருந்து, மேற்படி கட்சி கண்காணிப்பில் செயல்பட்டு வரும் 'தொழிற் சங்கப் பணி' புரிந்தவன்தான்.

"நான் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன். என்னை வெட்டியவர்கள் தி. மு. கழத்தைச் சேர்ந்தவர்கள்."

நீதிராசன் என்பவன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன்தான் என்பதை மெய்ப்பிக்க, வேறு ஒரு தொடர்பில் போலீசு நிலையத்தில் அவன் கொடுத்த வாக்குமூலத்தைத் தான் மேலே பொறித்திருக்கிறோம்.

அந்த வாக்குமூலத்தையும், அவன் போலீசில் கூறிய பித்தலாட்டக் கற்பனையையும், 18—1—57—ல் வெளியான 'ஜனசக்தி' இதழ், 'தூத்துக்குடி நீதிராசன் வெட்டப் பட்டார்' என்ற மூன்று பத்தித் தலைப்பிட்டு, அபாண்டமான மற்றொரு இரண்டு பத்தித் துணைத் தலைப்பும் தந்து வெளியிட்டிருக்கிறது.

அந்தக் கற்பனைச் செய்தித் துவக்கத்தில், 'அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கும் கம்யூனிஸ்டு அனுதாபி செ. நீதிராசன்' எனக் குறிப்பிடுவதின்மூலம் நீதிராசன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 'அனுதாபி' என்பதை 'ஜனசக்தி' மனமார ஒப்புக் கொண்டுள்ளது.

அது மட்டுமா?

18—1—57 'ஜனசக்தி' இதழ், இதற்கென ஒரு துணைத் தலையங்கமும் எழுதி இருக்கிறது. 'தூத்துக்குடியில் கம்யூனிஸ்டு அனுதாபி நீதிராசனை தி. மு. கழகத்தினர் வெட்டியும் குத்தியும் இருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ளது.

ஆனால்?......ஆனால்?

12—10—58-ல் வெளியான 'ஜனசக்தி' எழுதியுள்ள துணைத் தலையங்கத்தில், நீதிராசனைக் குறித்து தன்னாலேயே ஏற்றுக் கொண்டுள்ளதை மறுத்து பின்வருமாறு எழுதுகிறது:—

" தூத்துக்குடி தாளமுத்துக் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றுள்ள நீதிராசன் என்பவர், கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர் அல்ல."

'ஜனசக்தி' இதழைப் போன்றே, அவ்விதழால் பயிற்றுவிக்கப்பட்ட நீதிராசனும், "நான் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவன்" என வெளிப்படையாகக் கூறியுள்ளதற்கு மாறாக, நீதிமன்றத்தில், தான் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினனுமல்ல—அனுதாபியுமல்ல எனக் கூறியுள்ளான். இத்தகவலை 'ஜனசக்தி' கீழ் குறித்துள்ளபடி குறிப்பிட்டுள்ளது:—

'நீதிமன்ற வாக்குமூலத்தில், தான் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினனுமல்ல—அனுதாபியுமல்ல என்று நீதிராசனே ஊரறிய உறுதி கூறியுள்ளார்.'

கம்யூனிஸ்டு அனுதாபி என ஒருவரை ஒரு நாளைக்குக் கூறுவதும், ஒன்பது திங்கள் கழித்து ஒரு நாளைக்கு அதே நபரை கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 'ஒட்டும்—உறவும்' இல்லாதவர் எனக் கூறுவதும், 'ஜனசக்தி' இதழ் கண்ட 'அறவழி' போலும்!

தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கொலைவினையில் ஈடுபட்டு, கையும் மெய்யுமாகப் பிடிபட்டு, மாட்டித் தவியாகத் தவிக்கும்பொழுது—அதுவரை அவர்களைத் தமது கட்சிக்காரர்கள்தான் எனப் பறைசாற்றி வந்தவர்கள், அவர்களுக்கும் தங்கள் கட்சிக்கும் 'ஒட்டும்—உறவும்' அறவே இடையாது எனப் பேசுவதும், கம்யூனிஸ்டுக் கட்சியின் 'அறச் செயல்' அல்லவா எனப் பொதுமக்கள் அனைவரும் கேட்கிறார்கள்!"

—"நம் நாடு"

நன்றி

தமிழ்த் திருநாளன்று வாழ்த்தனுப்பியோருக்கு என் இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு. கருணாநிதி

எழுத்தறிவித்தவன் ....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

—ஆனால் இதற்கு அமைச்சர் என்ன காரணம் காட்டுகிறார்?

"பதினான்கு வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கத் தீர்மானக்கப்பட்டிருப்பதால் ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதற்கு சாத்தியமில்லாமலிருக்கிறது!"

—பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்களாம்; அந்த ஒரு காரணத்திற்காகத்தான் அனுதாபத்திற்குரிய ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு தர சாத்தியமில்லாமலிருக்கிறதாம்!

ஆனால் பதினான்கு வயது வரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி போதிக்க வேண்டுமென்பதற்கு மேன்மைமிகுந்த இந்த மாநிலத்தார் எந்தெந்த ஊதாரிச் செலவைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

கராச்சி தீர்மானத்திற்கேற்ப பண்டித நேரு உட்பட அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தில் ஒரு நயா பைசாவையாவது குறைத்துக் கொண்டிருக்கிறார்களா?

முந்த்ரா போன்ற பணமுதலைகளுக்கு பொதுமக்கள் பணத்தைத் 'தானம்' செய்வதைத்தான் குறைத்துக் கொண்டிருக்கிறார்களா?

ஆனால் அதே நேரம் இந்த மாநிலத்து மேன்மை தங்கிய கவர்னர் பிரான் ஆண்டொன்றுக்கு எவ்வளவு ஊதியம் பெறுகிறார்?

பத்து லட்சம் ரூபாய்கள் !

ஆரம்ப ஆசிரியன் குறைவான சம்பளம் வாங்கிவதை மட்டும் தெரிந்து வைத்திருக்கும் சுப்பிரமணியனார் இந்த மாநிலத்து கவர்னர் மிக அதிகச் சம்பளம் வாங்குவதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதேன்?

—இப்படிக் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பவர்கள் ஒருநாள் அவர்களாக பதில் தேடவே புறப்பட்டு விட்டால் அது அபாயமாக இருக்கும்!

—அமைச்சர் சுப்ரமணியனார் இதை உணர்ந்துகொள்ளட்டும்!

மு. கருணாநிதி
நிகழ்ச்சிகள்

பிப்ரவரி
4 காலை: துறையூர் (சிறப்புக் கூட்டம்)
6 புரசைவாக்கம்
9 மாயவரம்
11 குன்றத்தூர்
15, 16 சேலம் மாநாடு (வேலூர்)
19 கோடம்பாக்கம்
22, 23 இராமநாதபுரம் மாநாடு

இவை தவிர வேறு தேதிகளில் கூட்டங்களுக்கு ஒப்புதல் தர இயலாமைக்கு வருந்துவதாக தோழர் மு. க. அறிவிக்கிறார்.

பிறைவானம்

பேராசை பொல்லாது!

ஆசை பொல்லாதது; அது ஆபத்தின் அடித்தளம் என்பார்கள். நடக்க முடியாத ஒன்றை நினைப்பதும் தவறு; கிடைக்க முடியாத ஒன்றை விரும்புவதும் தவறு! தனது பலத்தை எடைபோட வேண்டும்; 'தகுமா' என்று சிந்திக்க வேண்டும்; தன்னால் இயலுமா என்று கணக்கிட வேண்டும்; பிறகு தானே எந்த முயற்சியிலும் ஈடுபட வேண்டும்! இது மிக மிகச் சாதாரண உண்மையல்லவா! இதை நன்கு உணர்ந்தவர்கள் மக்கள். ஆனால் அவர்களே இந்த உண்மைக்குப் புறம்பாக நடந்து விடுகிறார்களே; ஆபத்தில் சிக்கி விடுகிறார்களே; "ஐயையோ" என்று கதறுகிறார்களே!

அப்படியிருக்கையில், அந்தக் குருவிக் குஞ்சு மாத்திரம் என்ன செய்யும்? அதற்கும் ஆசை தோன்றியது. அது வியப்பல்ல; ஆனாலும் விபரீதமல்லவா!

தன் வயதென்ன; தன் நிலையென்ன; தன்னால் இயலுமா என்ன — என்பதையெல்லாம் அது சிந்திக்கவில்லையே! புத்திமதி சொல்லப்பட்டதே; அதையாவது ஏற்றுக் கொள்ள வேண்டுமல்லவா!

குருவிக்குஞ்சு தன் வீட்டில்—அதாவது மரக் கிளையிலிருந்த கூட்டில் படுத்துக் கிடந்தது. எதையோ பார்த்தது. 'சடக்' கென்று எழுந்தது. நின்று கொண்டது. அதன் கண்களோ, வானத்தை நோக்கி நிலைகுத்தி நின்றன. அங்கே ஏராளமான பறவைகள் பறந்து கொண்டிருந்தன. உயர உயரப் பறந்தன; சிறகடித்துப் பறந்தன; தன் இச்சைபோல் மகிழ்ச்சியோடு பறந்தன.

குருவிக் குஞ்சு பார்த்தது: பார்த்துக்கொண்டேயிருந்தது. திடீரென்று என்ன நினைத்ததோ தெரியவில்லை; தன்னுடைய இறகுகளையும் பார்த்துக் கொண்டது. அங்கே இறகுகளா இருந்தன? இல்லை; இல்லை; அப்போதுதான் வளர்ந்து கொண்டிருந்தன. இருந்தாலும் அந்தக் குஞ்சுக்கு ஏதோ ஓர் எண்ணம் தோன்றியது! புதிய எண்ணமல்ல; பழைய ஆசைதான் அது!

அப்போதுதான் வேகமாகப் பறந்து வந்தது, தாய்க் குருவி. மகனைக் கண்டதும் தாயுக்கு மகிழ்ச்சி! ஆனால் அந்த மகிழ்ச்சி மகனுக்கும் ஏற்பட வேண்டுமல்லவா; இல்லையே; ஏன்?

"கண்ணே! என்னடா பார்த்துக் கொண்டிருக்கிறாய்?..."—தாய்க்குருவி கேட்டது.

"அம்மா! அம்மா! நான் முன்பே கேட்டேனே; எனக்கு ஆசையாக இருக்கிறதம்மா!..."

"என்ன ஆசையடா கண்ணு?"

"நானும் பறக்க வேண்டும் அம்மா!.."

"ஐயையோ! ஆகாதுடா கண்ணே; உன்னால் முடியாதடா மகனே!..."

"ஏனம்மா முடியாது? இதோ பாருங்கள் என் இறக்கைகளை.........என்னைப் போன்றவர்கள்—நம் சொந்தக்காரர்கள் எல்லாம் அதோ எவ்வளவு வேகமாகப் பறக்கிறார்கள்! அவர்கள் முகங்களில்தான் எத்தனை கொண்டாட்டம்! குதூகலம்!...அம்மா, நானும் பறக்கத்தான் வேண்டுமம்மா!"—குருவிக் குஞ்சு தன் சின்னஞ் சிறு இறக்கைகளை 'பட பட'வென்று அடித்துக் காண்பித்தது.

தாய்க் குருவிக்கு ஆத்திரம் வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டது. மகனல்லவா; மனம் புண்படக் கூடாதே என்ற நல்ல எண்ணம் அதற்கு!

"வேண்டாமப்பா! இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள். உன் ஆசையை எல்லாம் தேக்கி வைத்துக் கொள். இறக்கைகள் நன்றாக வளரட்டும்; அப்புறம் உன் விருப்பம்போல் பறக்கலாம். நான் தடுப்பேனா உன்னை?" — என்றது தாய்க் குருவி.

குஞ்சு வாய் திறக்கவில்லை. பேசாமல் நின்றது. ஆனால் அதன் உள்ளத்தில்தான் எவ்வளவு ஆத்திரம்! தன் ஆசை தடுக்கப்படுவதாக — வேண்டுமென்றே மறுக்கப்படுவதாக அது நினைத்தது. தவறாக முடிவு செய்தது. 'பொல்லாத அம்மா'வை சபித்தது. இத்தனைக்கும் காரணம்? அதன் நெஞ்சு எரிமலைபோல் குமுறுவதற்குக் காரணம்?...ஆசை! அபாயத்தையும் உடன் அழைத்துவரும் ஆபத்தான ஆசை!

"இருடா மகனே! நான் போய் இரை தேடி வருகிறேன்...... இன்று என்னவோ அதிசயம்—இதுவரை ஒன்றுமே கிடைக்கவில்லை!" என்றது தாய்க் குருவி. கூட்டைவிட்டுப் புறப்பட்டது. இறக்கைகளை அகல விரித்தது. 'படபட'வென அடித்துக் கொண்டது. பறந்தது. மறைந்தது!

ஆனால்......குருவிக் குஞ்சின் மனதிலே தோன்றிய ஆசை... அது மறையவில்லை; அடங்கவில்லை; மாறாக புது உரு எடுத்தது! அப்பாடா...என்ன விபரீதமான நினைப்பு அது! நினைத்தால் நெஞ்சு குலுங்கும்; கேட்டால் உடல் நடுங்கும்! பயங்கரமான முடிவுதான் அது; படுநாசச் செயல்தான் அது; ஆனாலும்.......ஐயோ, என்ன செய்வது? அந்தப் பரிதாபத்திற்குரிய குருவிக் குஞ்சு எண்ணி விட்டதே! தடுப்பதற்கும் யாருமில்லை; தவிர்த்திடும் அம்மா இல்லை; தகாத வழி செல்லத் துணிந்து விட்டதே!

'என் இறக்கைகள்; என் ஆசை; இதை நிறைவேற்றிக் கொள்ள அம்மா எதற்கு? அனுமதிதான் எதற்கு? இதோ, நான் பறக்கப் போகிறேன்...... பறக்கப் போகிறேன்......ஆசையாக வானத்தில் சிறகடித்துப் பறக்கப் போகிறேன்!'

—குருவிக் குஞ்சு மகிழ்ச்சியால் கத்தியது. கூட்டை விட்டுக் 'குபீர்' என்று புறப்பட்டது. ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தது. ஆனால்.........என்ன இது...ஏன் அதனால் பறக்க முடியவில்லை? அதன் இறக்கைகள் ஏன் அசைய மறுக்கின்றன? பலமில்லை! ஆசை பழிவாங்கத் தொடங்கி விட்டது!...குருவிக் குஞ்சு "ஐயோ அம்மா!" என்று அலறியது! அந்த அழு குரலைத் தொடர்ந்து 'தொப்' என்ற சப்தம்...அது கீழே விழுந்தது: கீழே அல்ல; ஓடும் ஆற்றில்!

தண்ணீரில் விழுந்த குருவிக் குஞ்சு தத்தளித்தது; தடுமாறியது; "ஐயோ!......ஐயோ!"... என்று அலறியது. ஆனால் அந்த சப்தம்கூட எழும்பவில்லை. அது நீருக்குள் மூழ்கி மூழ்கி மீண்டது. 'கூண்டிலே பிறந்தேன்; நீரிலே சாகப் போகிறேன்...ஐயோ, அம்மா! ...உன் பேச்சைக் கேட்காமல் அறிவிழந்தேன்; உயிரையும் இழக்கப் போகிறேன்'—என்று கத்தவில்லை; எண்ணியது. அப்படியே நீருக்குள் அமிழ்ந்தது.

அப்போது......என்ன ஆச்சரியம்! எங்கிருந்தோ இரண்டு கரங்கள் அதைத் தொட்டன; பற்றித் தூக்கின. நீரிலேயிருந்து பிழைத்து விட்டது குருவிக் குஞ்சு! அதன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது! சாவிலிருந்தல்லவா மீண்டுவிட்டது!

ஆனால் இப்போது அதைத் தூக்கிக் கொண்டு பறப்பது யார்? ஒரு சமயம் அம்மாவாக இருக்குமோ?......குருவிக் குஞ்சு தன் தலையைத் தூக்கியது; பார்த்தது. அதன் முதுகைப் பிடித்திருக்கும் இரண்டு கால்கள் மட்டும் தெரிந்தன. யாரது...? தலையைச் சாய்த்துப் பார்த்தது! மறுகணம் 'ஓ' என்று அழ ஆரம்பித்து விட்டது! ஏன் தெரியுமா?

அது நீரிலிருந்து பிழைத்தது: இப்போது பருந்துக்கு விருந்தாகப் போகிறது! ஆமாம்; அதைக் கொத்திச் செல்வது ஒரு இரை தேடிக் களைத்த பசிக்காரப் பருந்துதான்!

குருவிக்குஞ்சு தான் சாகத்தான் போகிறோம் என்று முடிவு செய்து விட்டது. கண்ணீர் விட்டு அழுது கொண்டே இருந்தது. பருந்து பறந்து கொண்டே இருந்தது. மேலே மேலே பறந்தது. எங்கேயோ சென்றது.

கடைசியில் அப்பருந்து ஓர் இடத்தில் உட்கார்ந்தது. குருவிக் குஞ்சு சுற்று முற்றும் பார்த்தது. அது ஒரு அடர்ந்த காடு; நடுவிலே ஒரு உயர்ந்த ஆலமரம்; அதிலே ஒரு பெரிய பொந்து; அதன் வாசலில்தான் பருந்து உட்கார்ந்திருந்தது.

"ஐயா! என்னை விட்டுவிடுங்களய்யா! நான் அம்மாவிடம் ஓடிப் போய்விடுகிறேன்..." என்று கெஞ்சியது குருவிக் குஞ்சு. அதன் குரல் தழுதழுத்தது!

"அட பைத்தியமே! விட்டு விடவா ஆற்றிலிருந்து மீட்டு வந்தேன் உன்னை? இன்று எனக்கு உணவு நீ!...ஹா...ஹ்...ஹா!" என்று சிரித்தது பருந்து.

குருவிக் குஞ்சு "அம்மா! அம்மா!" என்று அலறியது.

என்ன பலன்? பருந்து தன் கூரிய அலகுகளை நீட்டியது! குருவிக் குஞ்சின் தலையை நோக்கிக் கொண்டு வந்தது! கடித்துக் குதறத் தயாரானது!

ஆனால் என்ன ஆச்சரியம்! மறுகணம் அந்தப் பயங்கரப் பருந்து "ஆ" என்று கதறியது! அதன் கழுத்தில் ஒரு அம்பு குத்திக் கொண்டு நின்றது! பருந்து நிலை தடுமாறியது; கீழே விழுந்தது. அதன் கால்களின் பிடியில் சிக்கி இருந்ததல்லவா குருவிக் குஞ்சு; அதுவும் கீழே விழுந்தது!

குருவிக் குஞ்சுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது ஒரு வேடன் ஓடிவந்தான். பருந்தை எடுத்தான். தன் பைக்குள் போட்டுக் கொண்டான். அவனுமா குருவிக்குஞ்சைப் பார்த்துவிட வேண்டும்? நடு நடுங்கிக் கொண்டே கிடந்த அதையும் தூக்கிக் கொண்டான்.

'நீரிலிருந்து பருந்திடம் சிக்கினேன்; பருந்திடமிருந்து இந்தப் பாவியிடமா சிக்க வேண்டும்?' என்று பயந்தது குருவிக்குஞ்சு.

ஆனால் அவன் அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தான். அவனால் ஆபத்தில்லையென எண்ணியது குருவிக் குஞ்சு. "உன்னையா இந்தக்

[தொடர்ச்சி பக்கம்—10]

வள்ளுவரும் அரசியலும்

"மணவழகர் மன்றத்தின் சார்பில் நடைபெறும் தமிழர் திருவிழாவில் அரசியல் வாடை வீசாது பேசுதல் வேண்டுமென இங்கு சிலரால் கருத்து வழங்கப்பட்டது. எனக்குத் தந்திருக்கிற தலைப்போ "வள்ளுவரும் அரசியலும்"! பாலைக் கரத்திலேந்துவிட்டுப் பருகாதே என்பதுபோலும், தேனை உதட்டில் தடவிவிட்டு அதனைச் சுவைக்காதே என்பதுபோலும், "வள்ளுவரும் அரசியலும்" எனத் தலைப்பு தந்து விட்டு அரசியல் பற்றிப் பேசுதல் வேண்டாமென்பதுமாகும்.

வள்ளுவர் வகுக்கும் அரசு, படை—குடி—கூழ் — அமைச்சு —நட்பு—அரண் ஆறும் உடையது! வள்ளுவரின் அரசில் படைவீரன் வருவான்! அரண் காப்போன் உலவுவான்! அமைச்சன் வருவான்! ஒற்றனும் வருவான்! அதனால்தானே என்னவோ, 'வள்ளுவரும் அரசியலும்" பற்றிப் பேசுகிற இந்த விழாவிலேகூட, அரசினர் தமது ஒற்றரை அனுப்பியிருக்கின்றனர்.

'ஒற்றினுன் ஒற்றிப் பொருள்
தெரியா மன்னவன்
கொற்றங் கொளக் கிடந்தது
இல்"

நாட்டு நடைமுறைகளை, நிகழ்ச்சிகளை ஒற்றர் வாயிலாகத் தெரிந்து அவற்றின் பயன்களை ஆராய்ந்து உணராத அரசுக்கு வெற்றிக்கு வேறு வழியே இல்லை என்பதே இந்தக் குறளின் கருத்து. நாடாள்வோர் இந்த உண்மையினை உணர வேண்டும். சட்ட மன்றத்தில் வாதிடும்போது நேரமில்லாத காரணத்தால், வள்ளுவர் நல்லரசுக்குத் தேவையானவை பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை என்னால எடுத்துரைக்க முடியவில்லை. நல்ல வேளையாக இதோ ஒற்றர் வந்திருக்கிறார். இவர் அக் கருத்துக்களத்தனையையும் அரசினரிடம் கொண்டு சேர்ப்பார் என நம்புகிறேன். ஒற்றர் தரும் விபரங்களை அலட்சியப்படுத்தும் அரசு என்ன ஆகும் என்பதையும் வள்ளுவர் கூறிவிட்டார். அரசுக்குத் தேவையான படை, அதற்குரிய மக்களை அடித்து வீழ்த்துவதற்காக இருக்க வேண்டுமென வள்ளுவர் கூறவில்லை. வீரத்தை முன்னிருத்தி விழுப்புண் ஏற்பதைப் புகழெனக் கொண்டு,

"கைவேல் களிற்றொடு
போக்கி வருபவன்
மேய்வேல் பறியா நகும்"

என்ற குறளின் கதாநாயகனுகிட வேண்டுமென்பதே படைவீரர்க்கு வள்ளுவர் தரும் ஊக்கமாகும்.

அரசுக்குத் தேவையான குடி பற்றி அவர் கூறுவது,

"நகைஈகை இன்சொல்
இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக்
குடிக்கு"

…ாகும்.

நல்லரசிலே இப்படித்தான் குடிகள் இருக்க வேண்டுமென்கிறார். இப்படிப்பட்ட குடி மக்கள் இருந்தால், இவர்களைக் கொண்டே அரசின் லட்சணத்தைக் கணக்கிட்டு விடலாம்.

முகமலர்ச்சி, ஈகைக் குணம், இனிய சொல், பிறரை இகழாமை—இவைதான் குடி மக்களின் இலக்கணம்.

இப்போதுள்ள அரசில் குடிகட்கு முகமலர்ச்சி உண்டா? இரந்திடும் நிலையிலுள்ளோர்க்கு ஈகைக் குணம் எங்ஙனம் தோன்றிடக்கூடும்? வயிறு பற்றியெரியும்போது, வறுமை தேளெனக் கொட்டும்போது எங்கிருந்து இனிய சொல் பிறக்க இயலும்? பிறரை இகழாமை என்ற அருங்குணத்தை அரசின் மாபெரும் மூலவர்களிடமே காண முடியாதபோது; சாதாரணக் குடிமக்களிடம் எங்கே சென்று தேடுவது? படை, குடி, மட்டுமல்ல—அரசுக்குக் கூழும் வேண்டுமென்கிறார் குறளார்.

"இந்த அரசில் கூழா இல்லை? அதைத் தவிர வேறு நல்ல உணவு கிடைப்பதில்லையே!" என யாரும் அவசரப்பட்டுக் கூறிவிட வேண்டாம். கூழ் என்றால் பொருள் என்று பொருள் கொள்க. ஆளப்படுகிறவரிடமும் இந்தக் கூழ் இலலை; ஆளுகிறவரிடமும் கூழ் இல்லையாம்! இருக்கிற கூழும் பாழாகிறது சிறுகச் சிறுக!

"முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்"......அவர்களை நல்ல அமைச்சர்களாக வள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மாருக, அவர்களைத் "திறப்பாடு இல்லா தவர்!" என்றே குறிப்பிடுகிறார்.

"தூங்காமை கல்வி துணி
வுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு!"

என்கிறார். எதிலும் காலந் தாழ்த்துகிற போக்கு ஆகாது என்பது அவர் கொள்கை. இப்போதுள்ள அரசிலோ, "ஆகட்டும்—பார்ப்போம்— கவனிக்கலாம்!' என்ற சொற்களுக்கே தனிச் சிறப்பு வழங்கப்படுகிறது.

துணிவு வேண்டுமாம்; நிலம் ஆள்பவர்க்கு! 'எமது நாட்டை நீ அடிமைப்படுத்தி எம்மைச் சீரழிக்கிறாய்—எம்மை உன் பிடியிலிருந்து விடுவித்து விடு' என்று கேட்கிற துணிவு எங்கேயிருக்கிறது, பதவியிலே ஒட்டிக் கொண்டிருக்கிற அடிமை அரசினருக்கு?

நிலத்தை ஆள்பவருக்குக் கல்வியும் இன்றியமையாத ஒன்றும். இந்தக் குறளுக்குத் தமிழ்நாட்டில் இப்போது செல்வாக்கு உண்டா என்று சற்று எண்ணிப் பாருங்கள்.

குறள் வழியில் அரசு அமையாதது மட்டுமல்ல; குறள் வழியில் ஆட்சி நிறுவ வேண்டி நமக்குரிய தாயகத்தை நாம் பெறுவோமெனக் கிளர்ந்தெழுந்தாலோ "இவர்களால் என்ன ஆகும்? இவர்கள் மிகச் சாதாரணமானவர்கள்!" என உருவைக் கண்டு எள்ளி நகையாடிவிட்டுப் போகிறவர்களை அரசியல் உலகில் காணமுடிகிறது. அவர்களுக்குப் பதில் கூறுவது போலத்தான், வள்ளுவர்,

"உருவுகண்டு எள்ளாமை
வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்று அன்றே எழுதியிருக்கிறார்.

வலிய கோட்டானைக் கூட, காக்கை வென்றிட இயலும். இரவிலே கோட்டானை ஜெயிக்க காக்கையால் முடியாது. ஆனால் அதற்கும் வள்ளுவர் வழி சொல்லுகிறார்: "பகல்வெல்லும் கூகையைக் காக்கை!" என்று!

பகல் நேரத்தில் கோட்டானைக் காகம் வென்று விடுமாம்! நமக்குத் துணிவு பிறக்கிறது, நிச்சயமாக வெற்றி கிடைத்து விடுமென்று! இரவு, பகல் என்பவை வன்செயல், அறவழி என்னும் பொருளில் கொள்ளப்படுமேயானால், உறுதியாக அந்த அறவழியில்—அதாவது பகலில் நமது இகல் வெல்லும் வாய்ப்பினைப் பெற்றே தீருவோம.

"விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப்
பெறின்"

சொல்வன்மை படைத்தவனது கட்டளையை உலகம் வெகு விரைவில் கேட்க முன் வரும் என்பது இதன் கருத்து. இந்தக் கருத்து பொய்யாக முடியுமா?

சொல்வல்லோனின் கட்டளைக்குக் கட்டுப்பாடாக அடங்கி நடந்த காட்சியினை பொங்கலன்று சென்னைக் கடற்கரையிலே கண்டோமே! ஆகவே, இந்த விழாவில் நாமெல்லாம் உறுதி பூணுவோம்; நமது தாயகத்தை வடுவிக்கவும்—தமிழனையைச் சிறப்பிக்கவும்!

"கொக்கொக்க கூம்பும்
பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

என்கிறது குறள்.

அதுபோல் காலம் கனியட்டும்; காத்திருப்போம் — காத்திருந்த கொக்கின் குறி தவறாததைப்போல நமது வெற்றியினைத் தேடுவோம் — என்று சொல்லி அனைவருக்கும் பொங்கல் வாழ்த்து கூறுகிறேன்!"

மணவழகர் மன்றத் தமிழ் விழா!

தமிழ் வளர்த்த தகைமையாளர் திரு. வி. கல்யாண சுந்தரனாரின் பெயரில் துவங்கி, செயலாற்றிவரும் மணவழகர் மன்றத்தினர், தைத் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து தொடர்ந்து ஐந்து தினங்கள் தமிழ் விழாவினை சீருடனும், சிறப்புடனும் கொண்டாடினர். சென்னை, கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட தமிழகத்து இலக்கிய மேதைகள் பலர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

விழா வரிசையின் மூன்ருவது தினமாகிய திருவள்ளுவர் திருநாளன்று தோழர் **மு. கருணாநிதி** "வள்ளுவரும் அரசியலும்' என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினார். அதன் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

சுருள் மலை...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கையை வரவழைத்துக் கொண்டு அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். புரண்டு படுத்தார். காதுப்புறம் தொங்கிக் கொண்டிருந்த சுருள் கேசம் சற்று விலகியது. காது பளபளவென்று மின்னியது. கவனித்தேன். விளக்கையேற்றிப் பார்த்தேன். பெருவியாதியின் ஆரம்பம்! அதைத்தான் அந்த அழகான கேசத்தால் மறைத்துக் கொண்டிருக்கிறார். கேசத்தை கையால் விளக்கிப் பார்த்தேன். என்ன கொடுமை—முழுவதும் கையோடு வந்து வட்டது. ஒரே வழுக்கைத் தலை! அவர் புரண்டு எழுந்தார். அதற்குள் நான், விளக்கைக் கீழே வைத்து விட்டுத் தூங்குவது போல் பாசாங்கு செய்தேன். அவசர அவசரமாகத் தலையைச் சரி செய்து கொண்டு. மூக்காலியில் இருந்த பற்களையும் எடுத்து வாயில் பொருத்திக் கொண்டு, நிலைக்கண்ணாடிக்கு நேரே நின்று அலங்காரத்தில் ஈடுபட்டார்.

"என்னால் படுத்திருக்க முடியவில்லை. அப்போதுதான் விழிப்பதுபோல எழுந்தேன். 'மைனு' என்று அன்போடு கூப்பிட்டவாறு அருகே வந்தார் அந்த அர்ச்சுனர்! என் கன்னத்தில் காலை முத்தம் ஒன்றும் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு. அழுகையையும ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தேன். வெளியே வந்த என் காதில்..."அய்யய்யோ!" என்ற ஒப்பாரி சப்தம் கேட்டது!

"என்னவென்று கேட்க ஓடினேன் என் அப்பா, விடியற்காலையில் கடைசித் தடவையாகக் கண்களை மூடிவிட்ட காட்சியைத் ..தாழ்வாரத்தில் கண்டேன்......"

(தொடரும்)

…ச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6